# திருக்கோயில்



மே2003

விலை ரூ 7.00



14-04-2003 தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் சென்னை நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீசுவரர் பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. ராமசாமி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்




தனி இதழ் : ரூ. 7.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 75.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 1000.00

| மாலை 45 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சுபானு - வைகாசி மே 2003 | மணி 5 |
|---|---|---|---|



சிறப்பாசிரியர்

திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,

எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.

கூடுதல் ஆணையாளர்

திருமிகு த. சுந்தரம் பி.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பி.எல்.

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.


<u>முகப்பு</u>

அருள்மிகு முருகப்பெருமானின்

அலங்காரத் தோற்றம்

## பொருளடக்கம்


தமிழ்ப் புத்தாண்டு முதல் மேலும் 18 திருக்கோவில்களில் அன்னதானத் திட்டம்

- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்

அப்பரின் அருளுரைகள்

- திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப., அரசுச் செயலாளர்

சிவபுராணம் - திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

ஆன்மீகம் - திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. (ஓய்வு)

வையகம் காக்கும் வைகுண்டமூர்த்தி

- வை. பழநிச்சாமி இ.ஆ.ப. (ஓய்வு)

அருளாளர் யார் எனக் கண்டுபிடியுங்கள்

- அ. நிறைமதி பி.எல்.

ஆட்கொல்லி (நீதிக்கதை) - முனைவர் த. அமிர்தலிங்கம்

திருமழபாடி வைத்தியநாத சுவாமி திருக்கோயிலும் நந்தி தேவர் திருமணமும் - கி.ஸ்ரீதரன் எம்.ஏ.

சிறப்புமிக்க சேது ஸ்தலம் - ஜி. வெங்கடேசன் எம்.இ.

மயிலையிலே மலர்ந்திருக்கும் முண்டகக்கண்ணியம்மா

- திருமதி உமா சுப்பிரமணியம்

மகரிஷி ரமணர் - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

அலங்காரத்தில் அற்புத அறிவுரைகள்

திருப்புகழ் மாமணி மு. அருணகிரி







உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *28334811, 28334812, 28334813*

## தமிழ்ப் புத்தாண்டு முதல்

# மேலும் 18 திருக்கோவில்களில் அன்னதானத் திட்டம்

### - மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்

தமிழக சட்டமன்றப் பேரவையில் 9.3.02 அன்று கவர்னர் உரையில் தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட திருக்கோவில்களில் நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கும், 'அன்னதானத் திட்டம்' என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதனைத் தொடர்ந்து முதல் கட்டமாக தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட 63 திருக்கோவில்களில் 23.3.02 அன்று இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. சென்னை மைலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோவிலில் 23.3.02 அன்று பகல் 12.15 மணி அளவில் பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் அன்னதானத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை நான் தொடங்கி வைத்தேன்.

இந்தத் திட்டத்தின்படி நாள் தோறும் இந்த திருக்கோவில்களுக்கு வரும் பக்தர்களுக்கு மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த திட்டத்துக்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. எனவே இத்திட்டத்தினைத் தமிழ்நாட்டில் உள்ள மற்ற திருக்கோவில்களிலும் செயல்படுத்த வேண்டும் எனப் பல கோரிக்கைகள் வந்தன.

எனவே 2-வது கட்டமாக மேலும் 63 திருக்கோவில்களில் 15.8.02 அன்று முதல் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொடர்ந்து இந்த அன்னதானத் திட்டத்துக்கு அமோக வரவேற்பு கிடைத்து வருகிறது.

மேலும் பல திருக்கோவில்களில் இந்தத் திட்டத்தினை ஆரம்பிக்க வேண்டும் என்று வேண்டுகோள்கள் வந்தன.

எனவே 3-வது கட்டமாக பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த நாளான 15.9.02 முதல் தமிழகத்தில் மேலும் 18 திருக்கோவில்களில் அன்னதானத் திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இத்துடன் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும் திருக்கோவில்களின் மொத்த எண்ணிக்கை 144 ஆக உயர்ந்துள்ளது.

23.1.03 அன்று சட்டமன்றப் பேரவையில் கவர்னர் உரையாற்றியபோது தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் அன்னதானத் திட்டம் மேலும் பல திருக்கோவில்களுக்கும் படிப்படியாக நீட்டிக்க இந்த அரசு திட்டமிட்டு வருகிறது என்று அறிவித்தார்.

அதன் அடிப்படையில் இத்திட்டம் 4-வது கட்டமாக பட்டியலில் உள்ளபடி 18 திருக்கோவில்களில் தமிழ்ப்புத்தாண்டு தினமான 14.4.03-ம் தேதி அன்று தொடங்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்ற செய்தியை இந்தப் பேரவையில் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். இத்துடன் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும் திருக்கோவில்களின் மொத்த எண்ணிக்கை 162 ஆக உயரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 14.4.03 முதல் 4-வது கட்டமாக தொடங்கப்படும் திருக்கோவில்களின் விவரம் பின்வருமாறு :-

1. அருள்மிகு அகஸ்தீஸ்வரர் மற்றும் பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோவில், நுங்கம்பாக்கம்.
2. அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோவில், கே.கே. நகர் (சென்னை மாவட்டம்).
3. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், குமார வயலூர்
4. அருள்மிகு உத்தமர் திருக்கோவில், பிச்சாண்டார் கோவில் (திருச்சி மாவட்டம்)
5. அருள்மிகு மதனகோபால சுவாமி திருக்கோவில், (பெரம்பலூர் மாவட்டம்).
6. அருள்மிகு நீலகண்ட பிள்ளையார் திருக்கோவில், ஏந்தல், பேராவூரணி வட்டம்.



14-04-2003 தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் சென்னை நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீசுவரர் பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. ராமசாமி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

7. அருள்மிகு சூரியநாராயணப்பெருமாள் திருக்கோவில், சூரியனார் கோவில், திருவிடைமருதூர் வட்டம் (தஞ்சை மாவட்டம்).

8. அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோவில், வேதாரண்யம்.

9. அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில், திருக்கடையூர், தரங்கம்பாடி வட்டம்.

10. அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோவில், வைத்திஸ்வரன்கோவில் (நாகை மாவட்டம்)

11. அருள்மிகு மூங்கிலணை காமாட்சியம்மன் திருக்கோவில், தேவதானப்பட்டி (தேனீ மாவட்டம்).

12. அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோவில், மீனாட்சி புரம், காரைக்குடி நகர் (சிவகங்கை மாவட்டம்).

13. அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோவில், மடவார் வளாகம் (விருதுநகர் மாவட்டம்).

14. அருள்மிகு நாகராஜா திருக்கோவில், நாகர்கோவில் (கன்னியாகுமரி தேவஸ்தானம்).

15. அருள்மிகு இசக்கியம்மன் திருக்கோவில், முப்பந்தல் (கன்னியாகுமரி மாவட்டம்)

16. அருள்மிகு செல்லீஸ்வரர் வகையறா திருக்கோவில், அந்தியூர், ஈரோடு வட்டம் (ஈரோடு மாவட்டம்)

17. அருள்மிகு மாரியம்மன் விநாயகர் திருக்கோவில், சூலக்கல் (கோவை மாவட்டம்)

18. அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி திருக்கோவில், இணைப்பு அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோவில் (சேலம் மாவட்டம்).

அன்னதானத் திட்டத்தை அமுல்படுத்த தேவைப்படும் நிதி நன்கொடையாளர்களிடம் இருந்து திரட்டப்படுகிறது. அன்னதானத் திட்டத்திற்காக நிதி அளிக்க விரும்புவோர் வசதிக்காக 144 திருக்கோவில்களில் தனியாக உண்டியல்கள் வைக்கப் பட்டுள்ளன.

14.4.2003-ம் தேதி அன்று அன்னதானத் திட்டம் தொடங்கப்படவுள்ள மேலும் 18 திருக்கோவில்களில் இத்திட்டத்திற்காக தனியாக உண்டியல்கள் வைக்கப் படும்.

உண்டியல் காணிக்கை தவிர இறையன்பர்கள், செல்வந்தர்கள், பிரமுகர்கள் மற்றும் தொண்டு உள்ளம் கொண்ட பொதுமக்கள் இத்திட்டத்திற்காக

# சுபிட்சத்தின் இன்னருளாய் ''சுபானு''வே வந்திடுவாய்

- திருமதி பட்டாம்பாள் ஆனந்தா

அஞ்ஞான இருளகற்றி மெய்ஞானம் தனை
அறிந்து
ஆணவ மலம் நீங்கி ஆன்மாதனை அறிந்து
இருள்சேர் இருவினை அகற்ற
இந்துவாரந்தனிலுதித்த
ஈசனின் இன்னருளே! ஈஸ்வரியாய் வந்திடுவாய்.
உத்தமன் அருளாலே உயிர்களை உய்வித்து
ஊழ்வினைதனை நீக்கி ஊக்கம் தனை அளித்து
எந்நாளும் எக்கணமும் எம்பிரானை நினைந்துருக
ஏகன் அநேகனின் இன்னருளாய் வந்திடுவாய்!
ஐம்புலன்தனை அடக்கி ஐந்தெழுத்தை ஓதிடவே
ஒப்பிலா மாமணியாம் ஓம்காரப் பொருளுரைத்த
ஔவைக்கருளிய அறுமுகனின் அருட்சக்தி
அஃதே! சுபிட்சத்தின் இன்னருளாய்
''சுபானுவாய்'' வந்திடுவாய்! வருக வருகவே!

தாராளமாக காசோலை, வரைவோலை மற்றும் ரொக்கமாக நன்கொடை வழங்குகின்றனர். மேலும் அன்னதானத் திட்டத்திற்கென அரிசி, உணவு மற்றும் காய்கறிகள் போன்ற பொருட்களாகவும் நன்கொடைகள் பெறப்படுகின்றன.

தவிர இந்த அன்னதானத் திட்டத்திற்கு உதவிட விரும்புவோர், தாங்கள் விரும்பும் திருக்கோவிலுக்குத் தலா 15 ஆயிரம் ரூபாய் செலுத்தி கட்டளைகளை ஏற்படுத்தலாம். அந்த கட்டளைகளிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கட்டளைதாரர் விரும்பும் நாளன்று குறைந்தபட்சம் 120 நபர்களுக்கு அன்னதானம் செய்ய அந்தந்தத் திருக்கோவில் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

மேலும் அன்னதான பொது வைப்பு நிதிக்கு நிதி வசதி உள்ள 8 திருக்கோவில்களின் உபரி நிதியிலிருந்து 20 கோடி ரூபாய் நிதி மாற்றம் செய்ய இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசாணை (நிலை) எண். 253 தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 12.11.2002-ல், ஆணை வெளியிடப்பட்டு உள்ளது.

இத்தொகை அன்னதான திட்ட பொதுவைப்பு நிதி, நிரந்தர வைப்பு நிதியில் முதலீடு செய்யப்பட்டு, அம்முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து அன்னதானத்திட்டத்தில் நிதிப்பற்றாக்குறை ஏற்படும் திருக்கோவில்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

மேலும், 9.3.2002 அன்று கவர்னர் உரையில் இத்தகைய கோவில்கள் அனைத்திலும் குழந்தைகளுக்கு ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறியைப் போதிப்பதற்காக ஞாயிறு தோறும் குறைந்தது ஒரு மணி நேரம் வகுப்புகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியை போதிப்பதற்காக முதற்கட்டமாக தமிழ்நாட்டில் அன்னதான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்ற 63 திருக்கோவில்களில் 24.3.2002 ஞாயிற்றுக்கிழமை அன்று வகுப்புகளும் துவக்கி வைக்கப்படும் என்றும் தெரிவித்து இருந்தேன். அவ்வாறு இந்த வகுப்புகள் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 3 மணி முதல் 4 மணி வரையிலோ அல்லது 4 மணி முதல் 5 மணி வரையிலோ நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆன்மீகப் பயிற்சி வகுப்புகளை உள்ளூர் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள், மற்றும் சமயச் சொற்பொழிவாளர்கள் நடத்துகிறார்கள்.

இரண்டாவது கட்டமாக, அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் மேலும் 63 திருக்கோவில்களிலும் மற்றும் மூன்றாவது கட்டமாக அன்னதானத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 18 திருக்கோவில்களிலும் ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியைப் போதிப்பதற்காக ஞாயிறுதோறும் குழந்தைகளுக்கு குறைந்தது ஒரு மணி நேரம் வகுப்புகள் மாலை 3 மணி முதல் 4 மணி வரையிலோ அல்லது 4 மணி முதல் 5 மணி வரையிலும் நடத்தப்படுகின்றன.

நான்காவது கட்டமாக அன்னதானத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ள 18 திருக்கோவில்களிலும் ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறி பாடங்கள் ஞாயிறு தோறும் குழந்தைகளுக்கு நடத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

★★★

# அப்பரின் அருளுரைகள்

- திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து அறநிலைய ஆட்சித்துறைச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

காலம் காலமாக மனித சமுதாயம் நல்ல முறையில் வாழவும், வளரவும், அவர்கள் வாழ்வில் அமைதி பெறவும், ஆண்டவன் அருள் கிட்டவும் அவ்வப்போது ஆன்மீகத் தலைவர்களும் தோன்றி நெறிமுறைப்படுத்தி வந்துள்ளனர். ரிக், யஜுர், சாமம், அதர்வணம் போன்ற வேதங்களும், உபநிடதங்களும், இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களும், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் போன்ற புராணங்கள் தோன்றி பல்வேறு ஆக்கப்பூர்வமான அறிவுரைகளையும், நீதி நெறிமுறைகளையும் மக்களுக்கு வழங்கி வந்துள்ளன என்பது நாம் எல்லாம் அறிந்த ஒன்றே.

வியாச முனிவர், வால்மீகி, துளசி தாசர், கபீர் தாஸ், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் போன்றவர்களும், ஆழ்வார்கள், நாயன்மார்கள், இராமலிங்க அடிகள், பட்டினத்தார், அருணகிரி நாதர் போன்ற இறையருட்செல்வர்களும் பல்வேறு வகையில் மக்களுக்கு நல்லொழுக்க நெறிமுறைகளைப் போதித்து வந்துள்ளனர். அவர்கள் பாடிய பாடல்கள், இயற்றிய இலக்கியங்கள் எல்லாம் என்றும் அழிவுறாமல் நிலைத்து நின்று மனித சமுதாயத்தை அறவழிப்படுத்துபவையாக உள்ளன.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழுக்கும், இறைத்தொண்டிற்கும் சைவ சமய குரவர்கள் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்று போற்றப்படும் சைவ நெறி அருளாளர்கள் தேவாரம், திருவாசகம் எனத் தெய்வ நூல்களை இயற்றித் தமிழுக்குப் பெருமை சேர்த்ததோடு மட்டுமல்லாமல் மக்களுக்கு சிவத் தொண்டின் மகிமையினை மாண்புற எடுத்துரைத்துள்ளனர். அந்த வகையில் திருஞான சம்பந்தரால் 'அப்பரே' என்று அழைக்கப்பட்ட திருநாவுக்கரசர் சைவ சமயத்திற்கும், மக்களுக்கும் ஆற்றிய தொண்டு யாராலும் எடை போட முடியாது. அவர் சித்திரை மாதம் சதய நட்சத்திரத்தில் சிவ பதம் அடைந்ததாக வரலாறு கூறுகிறது. அப்பேர்ப்பட்ட அருளாளரின் அருள் மொழியை இந்தச் சித்திரை மாதத்தில் நினைவு கூர்வது சாலச் சிறந்ததாகும்.

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் மரபில் குறுக்கையர் குடியில் (சுமார் கி.பி. 574-இல்) புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகனாகத் திருநாவுக்கரசர் அவதரித்தார். பெற்றோர்கள் அவருக்கு மருள்நீக்கியார் எனப் பெயரிட்டு அழைத்தனர். இளம் பருவத்தில் தம் பெற்றோரை இழந்த அவர் தமது தமக்கையரான திலகவதியாரின் அரவணைப்பில் இருந்து வந்தார். காவளர்த்தும் குளந்தொட்டும் பல அறப்பணிகளைச் செய்து கடப்பாடு வழுவாமல் வாழ்ந்து வந்தார் எனினும், உலக நிலையாமையை உணர்ந்து சமயநூற் கோட்பாடுகளை ஆராயப் புகுந்து நம்பர் அருளாமையால் சமண சமயம் குறுகினார்.

சமண சமயத்தில் மேம்பட்டுத் தருமசேனர் என்னும் பட்டம் பெற்றார். சூலை நோயால் வருந்தித் தமக்கையாரிடம் சரண் புகுந்தார். திருவைந்தெழுத்தோதித் திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப் பெருவாழ்வு வந்ததெனப் பெற்றுப் பூசிக் கொண்டு திருவதிகைப் பெருமானை வழிபட்டுக் ''கூற்றாயின வாறு விலக்ககிலீர்'' எனத் தொடங்கும் தேவாரத் திருப்பதிகம் பாடிச் சூலை நோய் நீங்கப் பெற்றார்.

சமணர்கள் இவரை நீற்றறையில் இட்டும், நஞ்சூட்டியும், யானையை ஏவியும், கல்லோடு கட்டிக் கடலில் பாய்ச்சியும் இன்னல் விளைத்தனர். ஆண்டவன் அருளால் எவ்வித இடையூறும் இல்லாமல் மீண்டார் என்பது வரலாறு.

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே''

என்ற பாடல் பாடி இறைவன் திருவருளைப் பெற்றார். பின்னர் பல ஆண்டுகள் திருவதிகையில் தங்கி உழவாரப்பணி செய்து வந்தார்.

தலயாத்திரை செய்ய விரும்பித் தலங்கள் தோறும் உழவாரப்பணி செய்தும் பதிகம் பாடியும் வழிபட்டார். அப்போது பெண்ணாகடத்தில் இறையருளால் இடபக்குறியும் சூலக்குறியும் தோளில்



பொறிக்கப்பெற்றார். கி.பி. 644-இல் சீர்காழியில் ஞானசம்பந்தரை முதல் முறையாகச் சந்தித்து அவரால் 'அப்பரே' என அழைக்கப்பெற்றார். பின்பு பல தலங்களை வணங்கி நல்லூர்க்கு வந்தபோது இறைவனால் திருவடி சூட்டப்பெற்றார்.

திங்களூரில் அப்பூதியடிகளின் மகன் அரவு தீண்டி இறக்க, அவனை உயிர்ப்பித்தார். திருப்புக லூரில் ஞானசம்பந்தரை இரண்டாம் முறையாகச் சந்தித்து உடனுறைந்தார்.

பின்னர் நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் சேர்ந்து தலயாத்திரை செய்தனர். திருவீழிமிழலை யில் இருவரும் படிக்காசு பெற்றனர். திருமறைக் காட்டில் வேதம் சாத்திய கதவை நாவுக்கரசர் பதிகம் பாடித் திறப்பித்தார். பின்னர் நாவுக்கரசர் தனியாக யாத்திரை மேற்கொண்டு செல்லும்போது பழை யாறை வடதளியில் உண்ணா நோன்பிருந்து அரசன் உதவியால் சமணர்களை அகற்றி அத்தலத்து இறை வனை வழிபட்டார். பின்னர் திருப்பைஞ்ஞீலியில் வழியிடையே இறைவனால் கட்டமுது தரப்பெற்றார்.

பின்னர் திருக்கயிலையைத் தரிசிக்க விரும்பிப் பனிமலையில் ஏறிச்சென்றார். செல்லும் வழியில் இறைவனால் தடுத்தாளப்பெற்று அங்குள்ள தடாகத் தில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்து கயிலைக் காட்சியைக் கண்டார். பின்னர் பல தலங்களை வழிபட்டுத் திருப்பூந்துருத்திக்கு வந்தபோது மூன்றாம் முறையாக ஞானசம்பந்தரைச் சந்தித்தார். சில நாட் கள் உடனுறைந்து ஞானசம்பந்தர் தொண்டை நாட்டு யாத்திரைக்காகப் பிரிந்து சென்றதும் நாவுக்கரசர் பாண்டி நாட்டு யாத்திரை மேற்கொண்டார். இறுதி யாகத் திருப்புகலூரில் வந்து தங்கி உழவாரப்பணி செய்து கொண்டிருந்தார்.

திருப்புகலூரில் உழவாரப்பணி செய்து வரும் போது தமது எண்பத்தோராம் வயதில் சுமார் கி.பி. 655-இல் சித்திரை மாதம் சதய நாளில் சிவானந்த ஞான வடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் அமர்ந்தார்.

**அப்பரின் அறிவுரைகள்**

பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது வள்ளுவம். பணம் காசு இல்லாவிட்டால் யாரும் நெருங்க மாட்டார்கள், பழகமாட்டார்கள் என்பதை உணர்த்தும் வகையில் மிகவும் அருமை யாகப் பாடுகின்றார். ஆதி சிவனை வழிபட்டால் அவன் அருளால் அனைத்தையும் பெறுவாய் என்று மக்களுக்கு அருளுரை வழங்குகிறார் அப்பர் பெருமான்.

''மாடுதான் அதுஇல் எனில் மானுடர்
பாடு செல்வார் இல்லை; பன்மாலையால்
கூடநீர் சென்று கொண்டீச்சுவரனைப்
பாடுமின் பரலோகத்து இருத்துமே''

என்று பாடுவதன் மூலம் சிவபெருமானை வழிபடுவதால் இறைவன் இவ்வுலகச் செல்வங்களையும், மேல் உலக நல்வாழ்வையும் தருவான் என்கின்றார்.

''வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்''

என்ற வள்ளுவரின் வாக்குப்படி பிறர் பொருளையும் தம் பொருள் போல் போற்றிச் செய்தால் அதுவே வாணிகஞ் செய்வோர்க்கு உரிய நல்ல வாணிக முறையாகும்.

மெய்யான வழியில் தேடுகிற செல்வமே நிலைத்து நிற்காமல் சென்றுவிடும்பொழுது பொய்யான வழியில் ஈட்டக்கூடிய செல்வமானது கண்டிப்பாக நிலைத்து நிற்காது என்பது அப்பரின் அருள் வாக்கு. அதுதான் இன்றைய நடைமுறையும் கூட.

பாடுபட்டுத் தேடி பணத்தை புதைத்து வைத்த கேடுகெட்ட மானிடர்களெல்லாம் கெட்டுப் போவதை இன்றும் நாம் காண்கிறோம். நாப்பிளக்கப் பொய் சொல்லி நவநிதியம் தேடுகின்ற மனிதர்களை உலகம் கண்டிப்பாக அடையாளம் காட்டும் என்று ஆணித்தரமாக செப்புகின்றார் அப்பர் பெருமானார்.

பொய்யான வழிகளில் சம்பாதிக்கும் அனைத்துப் பணமும் தன்கைவிட்டுப்போவது மட்டுமன்றி அவனைப் பெரும் துன்பத்திற்கு ஆளாக்கும் என்பதை அப்பர் மிகவும் அழகாகச் செப்புகின்றார். சிந்தையை ஒருமித்துச் செயல்பட்டால் சிறப்பாக வாழலாம் என்பது அப்பரின் திருவாக்கு. அதை உணர்த்தும் வகையில்,

''மாட்டைத் தேடி மகிழ்ந்து நீர் நும்முள்ளே
நாட்டுப் பொய் எல்லாம் பேசிடு நாணிலீர்
கூட்டைவிட்டு உயிர் போவதன் முன்னமே
காட்டுப்பள்ளி உளான் கழல் சேருமே''

என்று பாடியுள்ளார்.

அவரவரின் வினைகளுக்கேற்ப மனிதன் பிறவி எடுக்கின்றான் என்பது இந்து மத தர்மத்தின் இலக்கணம். அதனால்தான் அவர்களின் நல்வினை, தீவினைகளுக்கேற்ப சிலர் கண்பார்வை இல்லாதவராகவும், காது கேளாதவராகவும், அங்கீனம் அடைந்தவர்களாகவும் பிறக்கின்றார்கள். சிலர் அழகு பொருந்திய மேனியோடு பிறந்து மனிதப் பிறவியின் பயனை அனுபவிக்கின்றனர்.

திருமூலநாயனார் பாடுகின்றபோது ''என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்று பாடுவார். அதுபோல நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய உடல் பொருள் ஆவி அனைத்தையும் சிவபெருமான் திருவடிக்கே சேவை செய்ய அர்ப்பணிக்க வேண்டும். அதுதான் உலக வாழ்க்கை உய்ய உன்னத வழி என்று கூறுகின்றார் அப்பர் பெருமானார். அதை விளக்கும் வகையில்,

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே''

என்று பாடுகின்றார்.

இறைவன் அங்கிங்னொதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாக இருப்பான் என்றும், அவன் தூணிலும் துரும்பிலும் எங்கும் ஏகாந்தமாக இருப்பான் என்பதும் இந்து தர்மத்தின் நம்பிக்கை. தீர்த்தத்தில் மூழ்கினால் தீவினை அகலும் என்று மூழ்கினாலும் கூட இறைவனை நினைத்து, இறைவன் அங்கே குடியிருக்கின்றான் என்று எண்ணி மூழ்கினால் பிறவிப் பயன் கிட்டும் என்பது அப்பர் நமக்கெல்லாம் அறிவுறுத்தும் அறிவுரையாகும்.

''கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடினாலும் அரனுக்கு அன்பு இல்லையேல்
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்து அட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே''

என்று இறைவனின் இறை மாட்சியை இயம்புகின்றார்.

எவ்வித அச்சத்திற்கும் ஆட்படாதவர் அப்பர் பெருமான். தான் சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்கு மாறிய போது பல்லவ அரசர் அப்பரை அழைத்துவரச் சொல்லி அமைச்சரின் மூலம் தூது விடுகின்றார். அந்தத் தூதினை துச்சமாக மதித்து மிகவும் துணிச்சலோடு

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம், பிணி அறியோம் பணிவோம்
அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை''

என்னும் திருத்தாண்டகத்தைத் திருவாய் மலர்ந்தருளி அரசனின் ஆணைக்கு இணங்க மறுத்தார்.

ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்ற சமத்துவத்தை உலகுக்கு உணர்த்திய அருளாளர்களில் அப்பர் பெருமானும் குறிப்பிடத்தக்கவர். 63 நாயன்மார்களில் அனைத்து சமூகத்தினரும் உண்டு. அங்கே அரசருண்டு, அனைத்து மக்களும் உண்டு என்று தெளிவுறுத்துகின்றார். சாத்திரம் பேசி கோத்திரம் குலமெல்லாம் பேசி மனித சமுதாயத்தின்



மாட்சிமையை வீணடிக்க வேண்டாம் என்று அறி வுறுத்தும் அப்பர் பெருமான்,

''சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்
பாத்திரம் சிவம் என்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே''

என்று அறிவுறுத்துகின்றார்.

இறைவன் மீது எல்லையில்லாப் பற்று கொண்ட அப்பர் யாரெல்லாம் சிவனுக்குத் தொண்டு புரிகின்றார்களோ அவர்களையெல்லாம் வாழ்த்துவதும் வணங்குவதும், போற்றுவதும் புகழுவதும் நம் கடமை என்று தெளிவுறுத்துகின்றார்.

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லராகில்
அங்கமெல்லாங்குறைந்து அழுகுதொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே

உலகத்திலே வாழ்ந்தோமானால் சிவபெருமானைத் துதிக்கும் பேறு ஒன்று தான் பெரும்பேறாகும் என்று வாழ்க்கை முழுவதும் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பரம பதத்தை தொழுதவர் அப்பர் பெருமான்.

''குனித்த புருவமும் கொவ்வைச் செய்வாயில்
குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித் தமுடைய எடுத்த பொற்பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே''

இப்படி பல்வேறு காலக் கட்டங்களில் சைவ சமயத்தை வளர்த்து அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ள அப்பர் பெருமான் மக்களுக்குச் செய்யக் கூடிய சேவையே மகேசன் சேவை என்று தன் வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணித்த மிகப்பெரிய ஞானியாவார். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளில் சமுதாயக் கடமைகளை ஆற்ற வேண்டுமென்ற அரிய தத்துவத்தை உலகுக்குக் - குறிப்பாக தமிழ்ச் சமுதாயத்திற்கு உணர்ந்தியவர் அப்பர் பெருமான்.

ஆண்டவன் மீது பற்றுக்கொண்டு உலகில் பற்றற்ற வாழ்க்கையை நாம் கடைப்பிடிக்கின்ற போதுதான் உலகம் நம்மைப் பற்றும் என்ற ஆழமான தத்துவத்தை அகிலத்திற்கு ஆணித்தரமாக எடுத்துரைத்தார் அப்பர் பெருமான்.

தனி மனிதனுடைய வாழ்க்கை ஏற்றம் பெறவும், எழில் பெறவும், சமூக நெறி தழைக்கவும் அடிப்படையாகத் தேவாரத் திருமுறைகள் அமைந்தன என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தேவாரத் திருமுறைகளை பாடியவர்களுள் ஒருவரான அப்பரின் கோட்பாடுகளை நினைப்பதோடு மட்டுமல்லாமல் அவைகளை நெஞ்சில் நிறுத்தி வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பதுதான் உலகம் உய்ய ஒரே வழி என்பது திண்ணம்.

வாழ்க அப்பர் பெருமான்! வளர்க அவர் புகழ்!!

# சிவ புராணம்

திருமந்திரச் செம்மல் திருமிகு டி.வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்.

**ஈசன் அடி போற்றி**

கரங்குவித்தும் சிரங்குவித்தும் வணங்கத் தக்க எம்பெருமானை வாழ்க்கையில் முடிவான துறையில் நின்று கண்ட பெருந்துறையாளர் மணி வாசகப் பெருமான். பெருந்துறையில் பரம்பொருளை உற்று நோக்கிக் காணாமல் போய் விட்ட நிலையிலே வருந்தி ஆழ்ந்து சென்று, ஒப்பற்ற சில உண்மை களை உலகிற்கு எடுத்தியம்பியவர். தன்னையே மாய்த்துக் கொள்ளும் நிலையுள்ள ஆன்றோர். எனவே அவரைப் பெருந்துறையாளர் என்பர். பெருந்துறை உள்ளத்தில் பற்றினை விடுதலை செய்யக் கூடிய இடமாக அமைந்தது.

சைவ சமயக் குரவர்கள் நால்வரும் நான்கு துறைகளில் நின்றவர்கள்.

| | | |
|---|---|---|
| தோணித்துறை | - | ஞானசம்பந்தர் |
| அறத்துறை | - | அப்பரடிகள் |
| அருட்துறை | - | சுந்தரமூர்த்தி |
| பெருந்துறை | - | மணிவாசகர் |

ஞானசம்பந்தர், அருளும் ஞானமும் பெற்ற தலம் தோணிபுரம். எனவே அவர் தோணித்துறை யாளர். நாவுக்கரசர் சமண சமயத்திலே நின்று சைவம் ஏற்று திருவதிகையிலே இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர். தொண்டு என்பதை நெறி யாக மேற்கொண்டு அந்த நெறியை உலக பெரு மக்களுக்குப் பரப்புவதன் மூலமாக, அறத்தைத் தொண்டால் பரப்பியதால் அறத்துறையாளராகின் றார். திருவெண்ணெய் நல்லூரில் சுந்தரமூர்த்தியார் எம்பெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டவர். ஆணவத்தால் வன்தொண்டராகித் திருக்கோயிலுக் குள் புகுந்து ஆணவம் மறைந்தவர். ஆதலின் நல் லூருக்கு அருட்துறை என்ற பெயருண்டு.

ஆனால் மணிவாசகப் பெருமான், பெருந் துறையில் ஞானத்தின் ஞானமாக நின்றார்களென்று பெருமையாகச் சொல்வார்கள். பெருந்துறை அனு பவத்தைத் தரவல்லது. அறிவின் உயர்வுக்கு மூலக் காரணமாக அத்துறை அமையாது. உள்ளத்தில் புகக் கூடிய ஒன்று புகுந்து அறிவிலே பதிவது இறை யருளின் இயல்பு. இத்துறை அனுபவம் உணர்வு நிலையிலே பெறக்கூடியது. இறைவனைத் தன் னுள் ஒன்றுவித்த நிலையில் பெறும் அனுபவம் பெருந்துறை அனுபவம். இறைவனை அனுபவித்துத் தான் அறிய முடியும். ஆழ்ந்து சிந்தித்தால் மையக் கருத்துக்கள் நமக்கு ஒன்றிப் போக பல அனுபவங்கள் தோன்ற வாய்ப்புண்டு. நெறிகள் என்று காட்டப் படுபவைகளை அனுபவத்தின் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம். அகத்தே தோன்றுவதைச் சிக்கெனப் பிடிக்க வேறு விதமான அனுபவங்களும் தோன்று கின்றன.

அனுபவங்கள் யாவற்றிற்கும் மூல காரண மானவன் ஈசன். 'ஈசன்' என்ற சொல், தலைவன், ஆண்டவன், அனைத்திற்கும் உடமையாளன், எல் லாருக்கும் சொந்தக்காரன், எங்கும் எதிலும் நிற்கக் கூடியவன் எனப் பல பொருட்கள்படும். அவனுக் கும் உயிருக்கும் 'அடிமை' என்ற உறவு முறைக்கு அப்பாற்பட்ட வார்த்தைகளில்லை. அவனின்றி இயக்கமில்லை. ஓரணுவும் அசையாது. அவனின்றி நானில்லை. அவனைத் தலைவனாக்கி அடிமையாக வேண்டும். அடிமை, ஒழுக்கம் என்ற அடிப்படை யிலே வராது. அன்பின் அடிப்படையில் அமைவது. அவனது விருப்பத்திற்கு அப்பால் ஒன்றும் செய்ய யியலாத நிலை அடிமை நிலை.

உயிர்கள் தலைமையை, தலைவனாகயிருக்க விரும்பி பிறரை ஆட்கொள்ள வெற்றி கொள்ள வளர்ச்சியென்ற அடிப்படையில் தம்மை அமைத் துக்கொள்கின்றன. தாய், தந்தை, ஆச்சாரியர், நிர்வாகத் தலைவர் - இவர்களை நிர்ப்பந்தத்தின் பேரில் ஏற்றுக் கொள்கிறோமேயன்றி ஆழ்ந்து சிந்தித்து கணித்தால் உண்மை அன்புடன் ஏற்றுக்கொள்கிறோமா என்பது ஐயமே!

ஆனால் படிப்படியாக பக்குவம் பெற்று வளர வளரத் தன்னால் ஒன்றும் செய்யயியலாத நிலையில் 'தான்' என்பது ஒன்று கற்பனையே எனவும் தோன்ற லாம். அக ஆய்வில் அங்கங்கு ஒரு சிறு விளக்கு போல எரிவது காண முடிகிறது. எம்பெருமானின் பூரண வொலி கிட்டாது உயிர் தளர்வடைகின்றது. தளர்ந்த தன்னை தாங்கிக்கொள்ள எம்பெருமானை நினைந்து



நினைந்து உருகி பக்குவ ரீதியாக வளர்வது படி நிலை வளர்ச்சி. ஆன்மா முன்னேறி வளரும் போது பளிச்சென்று தோன்றும் உண்மை,

'நீயல்லாற் பிறிது மற்றொன்றில்லை'

என்பது ஆகும்.

துக்காராம் சிறந்த ஞானி. அவர் தன்னை நாயாக உருவகித்துப் பேசுவார். 'எம்பெருமானே! நினது வீட்டு வாசலில் நாய் காவல் காப்பது போல அமர்ந்திருக்கின்றேன். நன்றாக தூங்கிவிட்டு வா! நான் வாயிற் காப்போன்: என்னை மீறி வெளியேற முடியாது! நீர் எனக்கு ஒரு கவளச் சோறு போட்டீரே!'' என்பார். இங்கு 'கவள சோறு' என்பது திருவருளால் பெற்ற அனுபவ ஆனந்தம். அச்சோற்றைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும்போது ஐம்புலன்களால் உந்தப் பட்டு வரக்கூடிய உலகப் பற்று அல்லது ஆசை வந்தால் புலன்களாகிய திருடர்களை நாய் கடித்து போடுவது போல கடித்து போடுவேன்' என்பார். இக்கருத்தை மணிவாசகப் பெருமான்,

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடமை யெல்லாம்
குன்றே யனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ

எனும் பாடலில் தான் எம்பெருமானின் அடிமை. இறைவன் என்ன சொல்கிறாரோ அதனைச் செய்யக் கடமைப்பட்டவன் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறார்.

திருவெண்ணெய் நல்லூரிலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமணக் கோலத்தில் வலம் வரும் போது திருமணத்தை நிறுத்தினார் கிழ வேடம் கொண்ட எம்பெருமான். வெகுண்டார் சுந்தரர். அக்கிழவன், சுந்தரர் தனக்கு அடிமையென்று மூதாதையர் எழுதிய ஆவணத்தைக் காட்டுகிறார். 'அடிமை என்ற முறை இந்த ஊரிலேயே இல்லையே!' என்று ஆவணத்தைப் பிடுங்கிக் கிழித்து விடுகின்றார். ஆனால் அக்கிழவரோ மூல ஓலையைக் காட்டி, சபை கூட்டி, சபையின் தீர்ப்பிற்கிணங்க அவரை அழைத்துக் கொண்டு கோயிலுக்குள் நுழைந்து காட்சியளித்தார். வழக்காடுகையில் பித்தா! பித்தா! என்று அழைத்தமையால் ''பித்தா''! என்றே பாடலைத் தொடங்கும்படி ஆக்ஞாபித்தார் எம்பெருமான்.

என்தாயோடு என்னப்பன் ஏழேழு பிறவியும்
அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்

என்று சேக்கிழார் குறிப்பிடுவதற்கிணங்க 'அடிமை' பிறந்ததிலிருந்தே உடன் வருவது. உள்ளத்தில் உயிர் என்று சொல்லக்கூடியது தோன்றிய போதே வரும் சந்ததிகள், விதி முறைகள் அவன் அடிமைகள்.

# பெருங்கீர்த்தி வாதவூர் அடிகள் வாழ்க வாழ்க!

பெருந்துறையிற் சிவபெருமான் அருளுதலும்
பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந்து இருகண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்து
இருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூர்
அடிகளடி இணைகள் போற்றி

– ஸ்ரீமாதவச் சிவஞான யோகிகள்

ஒன்றாய் படைத்த பிரம்மன் பிறப்பிற்குக் காரண மானவன். ஆவணம் எழுத சாட்சியாக நின்றவன் முகில் வண்ணனான கண்ணன். இதனை கோயிலுக் குள் நுழைந்த எம்பெருமான் விளக்கினார். அடிமை யாதலே அன்பினால் விளைவது. அன்புள்ளத்தோடு ஏற்றுக்கொள்வது. அடிமை முறையே அவனாதலுக்கு வலிகோலும்.

ஆனால் மக்கள், உலகில், இருப்பதை விட்டு வேறொன்றைத் தேடுகின்றனர். தேடியது கிட்ட வில்லையானால் வருத்தமும் மன இறுக்கமும் கொள்கின்றனர். தத்துவ ரீதியாக, அறிவு ரீதியாகக் கிடைக்கக் கூடியதை ஏற்கின்றனரேயன்றி சென்று சென்று அணுஅணுவாய்த் தேய்ந்து தேய்ந்து அறிய முற்படுவதில்லை. அவன் தான் தனக்கு ஆதாரம் என்ற அடிப்படையில் இறைவனை உணர்ந்தே மணிவாசகப் பெருமான் எந்தையடி போற்றி என்று குறிப்பிடுகின்றார். அனைத்திற்கும் அவன் உடமை யாளன், காக்கவல்லவன் ஆதலின் 'எந்தை' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். 'எந்தை' தன்மை யிடத்தைக் குறிக்கும். உயிருக்கு உடமையாளன் எந்தை. உடலுக்கு உடமையாளன் தந்தை (படர்க்கை யில் சொல்லப்படுவது).

எந்தையாகியவன் தேசுடையவன். தேசு, ஒளி பொலிவு எனும் பொருளுடையது. இறைவன் ஒளி மயமானவன் என்பதால் தேசன் என்கிறார் மணி வாசகர். உள்ளத்தில் ஒளி அமைந்திருக்கின்றது. உயி ருக்கு இச்சாச் சக்தி, கிரியா சக்தி ஞானசக்தியென்ற மூன்று சக்திகள் உண்டு. இச்சக்திகள், இறை ஒளியைக் கிரகித்து உடலுக்குள் பாய்ச்சி, இயக்க வைத்து ஒளியைத் தருகின்றன. உயிருக்குச் சிற்சக்தி என்று சொல்லக்கூடிய ஒளியுண்டு. இவ்வொளிக்கும் நமது கற்பனை ஒளிக்கும் நடுவே அறியாமை திரை எல்லாவற்றிலும் தான் என்கின்ற மையத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவ்வொலி, மறைப்புத் திரையின் பிற்பகுதியில் இருப்பதால், மாயை, ஆணவத்தால் மறைக்கப்பட்ட நிலையில் அகக் கண்களுக்குப் புலப்படுவதில்லை. எனவே உணர முடிவதில்லை.

உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்கு
உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்மிறை
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்கு
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே

- திருமூலர்

என்னும் பாடல் இக்கருத்தை மெய்ப்பிக்கும்.

நிறைவாக, இறப்பு பிறப்பு சூழலில் வினைகள் படிப்படியாக கழிய, ஆன்மாவின் பக்குவம் வளர வளர, உலகை நோக்கும் பட்சத்தில் 'தான்' என்பது மில்லை: உலகிலும் ஒன்றுமில்லை என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆன்ம ஒளியும் தேஜஸ் (பொலிவு) குறைஉடையது. இது அகண்டாகார ஒளியில் ஒன்றும். இதனைத் திருமூலர், சுத்த வெளியில் சுடரில் சுடர் போய்ச் சேரும்' என்பார். இச்சுடர், தன்னை மறந்து தன்னை மாய்த்துக் கொண்டு அடையாளம் தெரி யாமல் ஒன்றி விடும். அவனது ஒளியின் வழியே செயல்கள், இயக்கங்கள் எல்லாம் இயங்குகின்றன. இந்நிலை பெற, எல்லாத் தத்துவங்களையும் விட்டு விலக வேண்டும். அப்பொழுது தான் உண்மை புலப்படும். இவ்வொளியை முழுக்க முழுக்க அனுபவித்த மணிவாசகப் பெருமான், சிவந்த திருவடிகளாகப் பாவித்து தேசனடி, சிவன் சேவடி போற்றியெனப் போற்றி வழிபடுகின்றார்.

***

# ஆன்மீகம்

- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப. ( ஓய்வு)
செயலாளர் - உறுப்பினர், வரிசீரமைப்பு மற்றும் வரிமேம்பாட்டுக் குழு, தமிழக அரசு.

1. ஆன்மீக விஷயங்களைத் தெரிந்திருப்பது மட்டுமே கடவுளிடம் சேர்ப்பிக்காது. இறைவனை அடைய வேண்டுமென்கிற முயற்சியும் அடங்காத ஆர்வமும் தணியாத தாகமுமே இறைவனிடம் சேர்ப்பிக்கும்.

2. தன்னை அழகியாகவோ அல்லது அழகனாகவோ பெறவில்லையென்றாலும் பெற்ற தாயை யாரும் பழிப்பதில்லை. ஆனால் அறியாமையால் உலகியல் வாழ்வில் ஏற்றத்தாழ்வு இருப்பதற்கு இறைவனைப் பழிக்கிறார்கள்.

3. வீடுபேறு அடைவதற்கு வழி தெரிந்திருந்தாலும் உலகியல் இன்பத்தில் சிறிதளவு நாட்டம் இருந்தால் வீடுபேறு அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளப் பெருந்தடையாக இருக்கும்.

4. அறிவு ஜீவியாக இருப்பவர்களிடம் கூட மெய்யறிவு இல்லாமல் இருக்கலாம்.

5. நீ பாதி நான் பாதி என்ற வகையில் இறைவன் உயிர்களுக்கு உறுதுணையாக இருக்கிறார். தன் பங்கிற்கான ஆர்வம் காட்டாத ஒருவனுக்கு இறையருள் தள்ளிப் போகிறது.

6. உலகியல் இன்பத்திற்காக நீண்டநாள் வாழ ஆசைப்படுவது இறைவனை விலகச் செய்கிறது. இறைவனை விரைவில் அடைய வேண்டும் என்கிற முயற்சியை மேற்கொள்வதற்கு நீண்டநாள் வாழ ஆசைப்படுவது இறைவனை நெருங்கச் செய்கிறது.

7. பிரபத்தி (சரணாகதி) செய்ய விருப்பம் உள்ளவர்கள்கூட சரியான வழிகாட்டி (ஆச்சார்யன்) இல்லாத காரணத்தால் பிரபத்தி செய்யாமல் இருக்கிறார்கள்.

8. ஆன்மீகத்தில் நாட்டம் இருந்தாலும் வாழ்க்கையில் சிறிதளவாவது துன்பம் ஏற்படாவிட்டால் ஆன்மீக வளர்ச்சிக்குப் பின்னடைவு ஏற்படும்.

9. நமக்குக் கிடைத்திருக்கிற இதயமே பூஜை அறைகளுக்கெல்லாம் பெரியதான பூஜை அறை.

10. கொடுப்பதே அன்பின் அடையாளமாகக் கருதப்படுகிறது. வசதியுள்ளவன் கொடுக்காமல் அன்பு செலுத்தினால் அந்த அன்பு பொய்யாகக் கருதப்படும். இறைவன் மீது அன்பு செலுத்தினால் பதிலுக்கு ஏதாவது நன்மையைச் செய்து விடுகிறார்.

11. தன்னைச் சுற்றி நடக்கும் அக்கிரமங்களைக் கண்டு ஆத்திரப்படுதல் ஆன்ம வளர்ச்சியைப் பாதிக்கும். இறைவனுடைய லீலை என்று எண்ண வேண்டும்.

12. மேலை வீடு எய்தும் நிலையில் இருப்பவர்களை நாட்டிலுள்ளோர் நகைப்பர் என்பது போல் போலி பக்தர்களும் நாட்டாரின் நகைப்புக்கு ஆளாவார்கள்.

13. ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள் என்று சொல்லப்பட்டது பதமுக்தி அடைந்தவர்கள் சாயுஜ்ஜிய பதவியை (பரமுக்தி - இறுதி முக்தி) பெறுவதைத் தாமதப்படுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும் என்பதற்காகவே சொல்லப்பட்டதாகும்.

14. மரணத்தை வெல்ல நினைக்கக் கூடாது. மரண பயத்தையே வெல்ல வேண்டும்.

15. அதிக நன்மைகளைத் தரக்கூடிய முதலீடு இறைசிந்தனையேயாகும். யாரும் மோசம் போனதில்லை.

16. இறைவனை எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பவன் இறைவனிடம் எந்தக் கோரிக்கையும் வைக்கத் தேவையில்லை. இறைவன் தீர்மானத்தின்படி நடக்க வேண்டியது நடந்து கொண்டேயிருக்கும்.

17. இறைவனை எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பவன் வழிபாட்டுக்கென நேரம் ஒதுக்குவ

## நூல் மதிப்புரை

**நூல் பெயர் :** சிந்தனை விதைகள்

**நூலாசிரியர் :** திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., (ஓய்வு)

**நூலின் விலை :** ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்)

**நூல் கிடைக்குமிடம் :** திருமதி சா. ஜெயமீனா
5E, பழைய கோபுர கட்டடம்,
நந்தனம்,
சென்னை - 600 035.

''சமயஜோதி'' திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் எழுதியுள்ள இந்நூல் ''மெய்ஞ் ஞான மெய்விளக்கு'' எனவும் ''அமிர்த சஞ்சீவி'' எனவும் பாராட்டத்தக்க அரிய தத்தவப் பெட்டகம். இந்நூலுள் இடம் பெற்றுள்ள 400க்கும் மேற்பட்ட சிந்தனைகள் நம்மை நன்கு பக்குவப்படுத்திக் கொள்ள வழிகாட்டும் அரிய ஆன்மீகச் சிந்தனை விதைகள் ஆகும். இந்நூல் ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறவேண்டிய சமயக் கருவூலம் ஆகும். மெய்யன்பர்கள் அனைவரும் வாங்கி ஆன்மீகப் பயன்பெற வேண்டுகிறோம்.

---

தில்லை. இறைவனை நினைத்துக் கொண்டிருப்பது மனப்பூசைக்கு இணையானது.

18. இயல்பான பக்தன் வழிபடும் முறைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளத் தேவையில்லை. தெரிந்து கொள்வதிலும் தவறில்லை.

19. தன்னைத் திருத்திக்கொள்ள வாய்ப்பிருப்பதால் ஆன்மிக நாட்குறிப்பு எழுதி வருபவன் ஆன்ம வளர்ச்சி அடைந்து கொண்டே வருவான் என்பது திண்ணம்.

20. துன்பத்தை எதிர்கொள்வதற்கு பண பலத்தை விட ஆன்மபலமே தேவைப்படுகிறது.

21. முதியவர்களுக்கு உள்ள மரணபயமும் இளைஞர்களுக்கு உள்ள வாழ்க்கையில் முன்னேற முடியுமா என்கின்ற பயமும் இடைவிடாத இறை சிந்தனையால் நீங்கும்.

22. அன்பான மனிதர்களுடன் பழகுவதால் ஏற்படும் ஆனந்தம் உலகியல் வாழ்வில் பிடிப்பையே ஏற்படுத்தும். இறைவன் நினைப்பினால் பெறும் ஆனந்தம் உலக வாழ்க்கையை விட்டுவிலகி இறைவனுடன் சேர்வதற்கு ஆவலைத் தூண்டும்.

23. தன்னைப் புகழ வேண்டும் பாராட்ட வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஒருவன் ஆன்மீக அறிவை பிறருக்குப் பரப்பினாலும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளலாம்.

24. சிற்றறிவு, பேரறிவைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் தெளிவு ஏற்படுமேயொழிய குழப்பம் ஏற்படாது.

25. கடவுள் சிந்தனை இருந்தாலும் கடமைகளை முடித்துவிட்டு முக்திப் பேறுக்கு முயற்சி செய்யலாம் என்று எண்ணுவது முக்திப்பேறு பெறுவதற்கு ஆர்வம் இல்லை என்பதைத்தான் தெரிவிக்கிறது.

26. இறைவனை அடையவேண்டுமென்கிற ஒரே குறிக்கோளுடன் இருப்பவனுக்கு உலகியல் இன்பமே முதலில் வாய்க்கிறது.

27. இறை நம்பிக்கை என்பது வெறும் ஆரம்பமே. இறைவனுடன் ஐக்கியமாக வேண்டும் என்கிற உணர்வே உலகத் துன்பங்களிலிருந்து விடுவிக்கும்.

28. புராணங்களில் வரும் சம்பவங்களைச் சம்பந்தப் படுத்தியே கடவுளைப்பற்றி அருளாளர்கள் தங்கள் பாடல்களில் சொல்லியிருப்பதால் புராணக்கதைகளை ஒதுக்கிவிட்டு இறைசிந்தனையை வளர்ப்பது கடினம்.

29. எல்லையில்லாத் துன்பத்தை அனுபவிப்பவர்கள் இறைவனைப் பழிப்பதைவிட இறைவனிடம் தஞ்சம் அடைவதுதான் துன்பத்திலிருந்து விடுபடுவதற்கான சரியான வழியாகும்.

30. வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் இறைவன் நினைவாக இருக்க முடியாது என்று நினைப்பது தவறு. எந்த வேலையில் இருந்தாலும் இறைவனை நினைத்துக் கொண்டிருப்பது சாத்தியம் ஆகும். (கார் ஓட்டுபவர்கள் காரை ஓட்டிக்கொண்டே பேசிக்கொண்டு வருவதையும் பார்க்கிறோம்.)

***

# வையகம் காக்கும் வைகுண்ட மூர்த்தி

- திருமிகு **வை. பழநிசாமி,** இ.ஆ.ப. (ஓய்வு)
தமிழக மாநிலத் தேர்தல் ஆணையர்

ஈரேழு தேவலோகம்
வைகுண்டம் விட்டு...
வையகத்துயிர்களை
காக்க வந்த பெருமானே!
வைகுண்ட மூர்த்தியாரே!
உமை கையெடுத்துக்கும்பிட்டு
காத்தருள வேண்டுகிறோம்
கீர்த்திதனை தந்தருள்வாய்...!

வைகுண்ட மூர்த்தியாரை வணங்க பக்தர்களால் அன்றாடம் பாட்ப்படும் பாடல் இது. வைகுண்ட வாசியான இந்த வைகுண்டமூர்த்தியார் அங்குள்ள ஈரேழு தேவலோகம், சுகபோக வைகுண்ட வாசம் அனைத்தையும் தியாகம் செய்து விட்டு பூலோக உயிர்களை காப்பதற்காக பூலோகத்தில் வந்து ஆங்காங்கே நிலைகொண்டுள்ளார் என்பதை இந்த பாடல் வரிகள் தெரிவிக்கிறது. இவ்வாறு நிலை கொண்டுள்ள வைகுண்டமூர்த்தி தென்னிந்திய கிராமத் தெய்வங்களில் கிராமத்தைக் காக்கும் முதன்மை காவல் தெய்வமாக விளங்கும் அய்யனாராகவும், தர்மசாஸ்தாவாகவும், கேரளாவில் சபரி மலையில் ஐயப்பனாகவும் பல்வேறு பெயர்களில் பல ஊர்களில் எழுந்தருளி பக்தர்களை காத்து வருகிறார்.

## வரலாற்றுப் புகழ்

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுகா சுந்தரபாண்டியத்தில் 'பெரியகோயில்' என்றழைக்கப்படும் வைகுண்ட மூர்த்தி சுவாமி கோயிலில் தர்மசாஸ்தாவாகவும் அய்யனாராகவும் இருவேறு உருவங்களில் எழுந்தருளி அப்பகுதி மக்களை காத்து வருகிறார். வைகுண்டமூர்த்தி சுவாமி கோயில் கி.பி. 1620-ம் ஆண்டில் தற்போதைய சுந்தர பாண்டியம் பகுதியை ஆட்சி செய்து வந்த மாறவர்மன் சுந்தர பாண்டியனால் கட்டப்பட்டு வரலாற்றுச் சிறப்புடன் திகழ்கிறது. இக்கோயிலில் அந்த மன்னனின் கலை நயத்தை வெளிப்படுத்தும் அழகிய சிற்ப ஓவியங்கள் இன்னும் அவனது புகழைப் பறைசாற்றும் வகையில் எழிலுற அமைந்துள்ளன.

## கோயில் சிறப்பம்சம்

பல ஊர்களில் காவல் தெய்வமாக, அந்தந்த ஊர்களில் எல்லைகளில் எழுந்தருளியுள்ள அய்யனார், எல்லா இடங்களிலுமே தவக்கோலத்தில் தனியாக காட்சியளிப்பார். ஆனால், இக்கோயிலில் பூரண, புஷ்கலா என்ற இரு பெருந்தேவியருடன் சேர்ந்து தம்பதி சகிதமாக காட்சியளிக்கிறார். மேலும் 61 பந்தி 21 சேனை தளங்களுடன் தனது பரிவாரங்களுடன் காட்சியளிக்கிறார். குழந்தை பாக்கியம் வேண்டுவோர்க்கு அருள் பாலிக்கும் தன்மையுடையவர். அதற்காகவே நாள்தோறும் இங்கு பக்தர்கள் வருவதுண்டு.

## மாமுண்டி கருப்பசாமி

இங்குள்ள 21 சேனை தளங்களுக்கு முதன்மையானவர் மாமுண்டி கருப்பசாமி. மூலஸ்தானத்திற்கு வலப்புறம் தனி சன்னிதானத்தில் கம்பீரமாக காட்சியளிக்கிறார். ஆங்கிலேயர் ஆட்சியில் வெள்ளைக்கார துரை ஒருவன் சுவாமியை அலட்சியம் செய்ய, அந்த வழியாக குதிரையில் சென்ற அந்த துரையை குதிரையோடு சுவாமி தூக்கி எறிந்ததாகவும், தவறை உணர்ந்த அவன் சுவாமிக்காக தனது குதிரையை விட்டுச் சென்றதுடன் குதிரை பீடமும் 21 அடி உயரத்தில் அமைத்ததாகவும் வரலாறு கூறுகிறது.

இந்த குதிரை பீடத்தில் தான் வைகுண்ட மூர்த்தி சாஸ்தா வடிவில் அமர்ந்து பாரிவேட்டைக்கு செல்வதாக கூறப்படுகிறது. இதனை மெய்ப்பிக்கும் பொருட்டு வைகுண்ட மூர்த்தி சுவாமி வேட்டைக்கு போகும் காட்சியுடன் சாஸ்தாவாக கோயிலுக்கு வெளியேயும், தம்பதி சகிதமாக அய்யனாராக கோயிலுக்கு உள்ளேயும் இரு வேறுபட்ட அவதாரத்தில் ஒரே கோயிலில் அருள்பாலிக்கிறார். இது இக்கோயிலின் கூடுதல் சிறப்பம்சமாகும்.

## பாரிவேட்டை

இங்கு முக்கியத் திருவிழா பாரிவேட்டை. துஷ்டசக்திகளை வேரறுக்கவும், தன்னைச் சுற்றி



அருள்மிகு வைகுண்ட மூர்த்தி திருக்கோயில் பாலாலய விழாவில் தமிழ்நாடு மாநிலத்தேர்தல் ஆணையர் திருமிகு வை. பழநிச்சாமி, இ.ஆ.ப (ஓய்வு), இணை ஆணையாளர் திருமிகு ஆ. சண்முகம், பி.ஏ.பிஎல். ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பத்தார்கள்.

சார்ந்துள்ள துஷ்ட தேவதைகள், 21 சேனை தளங்களுக்கு ரணபலி வழங்கவும் வருடம் ஒரு முறை அய்யனார் வேட்டைக்குச் செல்வதாக ஐதீகம். இதற்காக நடத்தப்படும் பாரிவேட்டை திருவிழாவில் ஆடு, கோழிகளை பலியிட்டு அதன் ரத்தத்தை சோற்றில் கலந்து நடு இரவு 2 மணியளவில் காளி பீடம் அருகே புளியமரத்தின் மீது அந்தரத்தில் வீசுவார்கள். வீசப்பட்ட அது கீழே விழாது என்று இன்றும் பக்தர்களால் கூறப்படுகிறது. இத்திருவிழா மாசி மாதம் அமாவாசையை ஒட்டி 3 நாட்கள் கோலாகலமாக நடத்தப்படுகிறது. இதற்கு அடுத்த படியாக முக்கியத்துவம் வாய்ந்தது சித்திரை திரு விழா. இதை ஒட்டி காலடி பூஜை நடத்தப்படுகிறது.

அந்நாளில் வைகுண்டமூர்த்தி சுவாமி குதிரை வாகனத்திலும், அம்மன்கள் இருவரும் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்திலும், நடராஜர் சிவகாமியம்மன் ஒரு பல்லக்கிலும் கோயிலை வலம் வந்து காட்சியளிப்பர். இது தவிர மகாசிவராத்திரி, நவராத்திரி போன்ற விழாக்கள் எழுச்சியோடு கொண்டாடப்படுகிறது.

## அமைவிடம்

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புதூர் தாலுகாவில் உள்ள சுந்தரபாண்டியம் ஊருக்கு 1 கி.மீ. தொலைவில் கோட்டையூர் மெயின்ரோட்டில் உள்ளது.

வரலாற்று சிறப்பு வாய்ந்த இக்கோயிலில் தற்போது சுமார் ரூ. 20 லட்சம் மதிப்பீட்டில், 3 அடுக்கு மூலஸ்தான கோபுரமும், மற்ற சன்னதிகள் இதர பகுதிகள் முற்றிலுமாக புதுப்பிக்கப்பட உள்ளது. இந்து அறநிலையத்துறையின் மூலம் இதற்கென திருப்பணி கமிட்டி அமைக்கப்பட்டு பணிகள் நடந்து வருகிறது. இதற்கான பாலாலயம் மார்ச்சு 10-ம் தேதி நடந்து உள்ளது.

அப்பணிகளில் நாமும் ஒரு துளியேனும் பங்கேற்று சுவாமியின் அருள் பெறுவோமாக... வைகுண்ட மூர்த்தியே சரணம்! சாஸ்தாவே சரணம்....!

★★★

# அருளாளர் யார் எனக் கண்டுபிடியுங்கள்?

- அ. நிறைமதி, பி.எல்.

அருள் வாழ்க்கையே வாழ்க்கை என அறிவுறுத்தும் அருளாளர் ஒருவரின் அமுதமொழிகள் சில இங்கு தரப்பட்டுள்ளன. இவற்றை அருளிய அருளாளர் யார் எனக் கண்டுபிடியுங்கள். இயலாதவர்கள் விடையைப் பக்கம் 19-இல் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

1 அருள்வடி வான மருந்து - நம்முள்
அற்புதமாக அமர்ந்த மருந்து
இருளற ஓங்கும் மருந்து - அன்பர்க்கு
இன்புருவாக இருந்த மருந்து
நல்ல மருந்திம் மருந்து - சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து

2. அல்லார்க்குங் குழலார்மேல் ஆசை வைப்பேன்
ஐயாநின் திருத்தாள்மேல் அன்பு வையேன்...
எல்லார்க்கும் பொல்லாத பாவியேன் யான்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் இருக்கின்றேனே

3. மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும் உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழ வேண்டும்

4. அருளறி யார்தமை அறியார் எம்மையும்
பொருளறி யாரெனப் புகன்றமெய்ச் சிவமே
அருணிலை ஒன்றே அனைத்தும் பெறுநிலை
பொருள் நிலை காண்கெனப் புகன்றமெய்ச் சிவமே.

5. சாதிமதம் சமய மெனும்
சங்கடம் விட்டறியேன்
சாத்திரச்சே றாடுகின்ற
சஞ்சலம் விட் டறியேன்.

6. படமுடியா தினித்துயரம்
படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதும் இந்தப்
பயம் தீர்த்துஇப் பொழுதுஎன்
உடலுயிரா தியவெல்லாம் நீ எடுத்துக் கொண்டுன்
உடலுயிர் ஆதிய வெல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்.

7. வாழையடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
மரபில்யான் ஒருவன் அன்றோ வகையறியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச்சம் மதமோ?
இதுதகுமோ இதுமுறையோ இதுதருமம் தானோ?

8. மனமெனுமோர் பேய்க்குரங்கே
மடப்பயலே நீதான்
மற்றவர் போல் என்னநினைத்து
மருட்டாதே கண்டாய

9. மரணமெனும் பெருந்திருட்டு மாபாவிப் பயலே
வையகமும் வானகமும் மற்றகமும் கடந்தே
பரணமுறு பேரிட்டுப் பெருநிலமும் தாண்டிப்
பசையறநீ ஒழிந்திடுக!

10. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்
பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்.

11. பணத்திலே சிறிதும் ஆசைஒன் றிலைநான்
படைத்தஅப் பணங்களைப் பலகால்
கிணற்றிலே எறிந்தேன் குளத்திலும் எறிந்தேன்
கேணியில் எறிந்தனன் எந்தாய்.

12. கலையுரைத்த கற்பனையே நிலைஎனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக
மலைவறு சன்மார்க்கம் ஒன்றே நிலைபெற எவ்வுலகும்
வாழ்ந்தோங்கக் கருதிஅருள் வழங்கினைஎன் தனக்கே.

★★★

# ஆட்கொல்லி

- முனைவர் த. அமிர்தலிங்கம்

(நீதிக்கதை)

பொருள் பெற்றார் தாம் பெற்ற பொருளைத் தாயத்தார், கள்வர், கொடுங்கோல் மன்னர் ஆகிய பலரும் கவர்ந்து கொள்வரோ என்று அஞ்ச நேரிடு கிறது.

ஆகவே

''அறைபொருள் பெற்றார் அல்லர்
அச்சமே பெற்றார்'' (குசேலர் . 107)

எனச் செல்வந்தர்களைப் பழித்துரைத்திருக்கக் காணு கின்றோம்.

தம்மை உடையாரைச் செல்வம் பல தகாத செயல்களைச் செய்யவும் தூண்டுகின்றது. கொலை, காமம், கள், களவு, பொய் முதலிய பெருந் தீமை களைப் போதிக்கும் தந்தையாகவும், நண்பர்களுக்குள் பகையை உண்டாக்கும் பகைவனாகவும், உலகத் துன்பங்களை உண்டாக்கும் அன்னையாகவும், கொடுஞ்செயல்களின் வளர்ப்புத் தாயாகவும் விளங்குவது செல்வமாகும்.

ஆகவே அத்தகைய செல்வப்பொருள் துன்பத் திற்கு உறைவிடமே ஆகும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றன நீதிநூல்கள்.

''ஈட்டலும் துன்பம்மற்று ஈட்டிய ஒண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம் - காத்தல்
குறைபடின் துன்பம் கெடின்துன்பம் துன்பக் (கு)
உறைபதி மற்றைப் பொருள்''

என்பது நாலடியார்.

''இப்பொருளை நற்பொருள் என்றெப்படி நீ
ஒப்புகின்றாய் ஏழை நெஞ்சே''

என்பார் வேதநாயகம் பிள்ளைதம்முடைய நீதிநூலில்.

ஆகவேதான் அல்லல்தரும் பொருளை மெய்ப் பொருள் என்று சொல்லாமல், ஆண்டவனையே பரம்பொருள், மெய்ப் பொருள் என்று அருளாளர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். எது செல்வம் என்று தெளிவுபடுத்தும் நம் திருஞானசம்பந்தர் சுவாமி களும்

''செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலம்மேய
செல்வன் கழல்ஏத்துஞ் செல்வம் செல்வமே''

என்று இறைவன் திருவடிகளை ஏத்தும் செல்வமே செல்வம் என்று பாடியிருக்கக் காணுகின்றோம்.

''காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே'' என்ற பட்டினத்தடிகளின் பொன்மொழி யைத் தேர்ந்த சிவஞானி ஒருவர், பொய்ப்பொருள் அனைத்தையும் வெறுத்து, மெய்ப்பொருளை தியானித்து காட்டில் தவம்செய்துகொண்டிருந்தார்.

அச்சிவஞானி ஒருநாள் அடர்ந்த காட்டில், புதர்நடுவில் ஒரு குடம் நிறைய பொற்காசுகளைக் கண்டார். ''தகதக''வென ஜொலித்துக் கொண்டிருந்த அப்பொற் காசுகளைக் கண்ட அவர் சிங்கத்தைக் கண்டதைப் போலவும், கொடும் புலியைக் கண்டதைப் போலவும் அலறியவராய் அவ்விடத்தை விட்டு ஓடி வந்து கொண்டு இருந்தார்.

அவ்வழியே வந்துகொண்டிருந்த மணியம், செல்வம் என்ற இரு நண்பர்கள் சிவஞானியைத் தடுத்து ''என்ன சுவாமி என்ன? ஏன் பதறியடித்து ஓடி வருகிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

அதற்கு சிவஞானி நாகுழறியவராய் ''அதோ அந்தப் புதரில் ஆட்கொல்லி இருக்கிறது! அப்பக்கம் போகாதீர்கள்'' என்று எச்சரித்துத் தம் வழியேதாம் சென்றுவிட்டார்.

ஆளைக் கொல்லும் விலங்குகளுக்கே ஆட் கொல்லி என்பது பெயராகும், சிங்கமோ, புலியோ, சிறுத்தையோ, அடர்ந்த புதரில் மறைந்து இருக்கிறது போலும் என்று அஞ்சிய மணியமும், செல்வமும் ஒரு மரத்தின் மேலேறி ஒளிந்து கொண்டார்கள்.



வடபழநி அருள்மிகு வடபழநியாண்டவர் ஆலயத்தில் தெப்போற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இணை ஆணையாளர் (தலைமையிடம்) திருமிகு த. சுந்தரம், பி.ஏ., பி.எல்., சென்னை இணை ஆணையாளர் திருமிகு மு.க. பால சுப்பிரமணியம், பி.ஏ., பி.எல். திருக்கோயில் துணை ஆணையாளர் திருமதி ந. திருமகள், எம்.ஏ. பி.எல். ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

கொஞ்ச நேரம் மரத்தில் ஒளிந்துகொண்டிருந்த அவர்கள் ஏதும் விலங்குகளின் அரவம் கேட்காமல் போகவே மனத்தில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, மரத்திலிருந்து இறங்கி வந்து ஓரக் கண்ணால் அப்புதரின் பக்கம் பார்த்தார்கள்.

தகதகவெனப் பொற்காசுகள் ஜொலித்துக் கொண்டு இருந்த, தங்கப் புதையல் குடம் அவர்கள் இருவரின் கண்களில் பட்டுவிட ஓடிப்போய் அதைத் தழுவிக் கொண்டு ''நம் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்; அந்தத் துறவி இந்தப் பொற்குடத்தைப் பார்த்து ''ஆட்கொல்லி'' என்று அலறி நம்மையும் பயந்து ஒளியச் செய்து விட்டாரே!'' என்று துறவியின் மெய்வாக்கைப் புரிந்து கொள்ளாமல் அவரைப் பரிகசித்தார்கள்.

தத்தம் மேற்துண்டைப் போட்டுப் பொற்குடத்தை நன்கு மூடிய மணியமும், செல்வமும் அக்கம்பக்கம் ஆளரவம் கேட்கிறதா என்று பார்த்துக் கொண்டார்கள்.

''இப்பொழுது பொற்குடத்துடன் ஊருக்குள் சென்றால் நமக்குப் புதையல் கிடைத்து ஊருக்கே தெரிந்துவிடும்'' என்றான் மணியம்.

''ஆமாம் ஆமாம். நன்கு இருட்டிய பிறகுதான் பொற்குடத்துடன் ஊருக்குள் செல்ல வேண்டும். நாமிருவரும் சரிபாதியாக பொற்குடத்தைப் பகிர்ந்து கொண்டு குபேரராக வாழலாம்'' என்றான் செல்வம்.

புதையல் காத்த பூதம் போல பொற்குடத்தைப் பாதுகாத்துக் கொண்டு இருந்த அவ்விருவருக்கும் உச்சி வேளையில் பசி பொறுக்க முடியவில்லை.

''மணி! நான் இந்தக் குடத்தை மிக பத்திரமாகப் பார்த்துக் கொள்கிறேன். நீ அருகிலிருக்கும் ஊருக்குள் போய் உன் பசிக்கு ஏதாவது சாப்பிட்டு விட்டு எனக்கும் கொஞ்சம் உணவைப் பொட்டலம் கட்டிக் கொண்டுவா! போ'' என்றான் செல்வம்.

மணிக்குப் புதையலை விட்டுப் போக மனமே இல்லை; என்றாலும் பசி அதிகமாக வயிற்றைக் கிள்ளவே அரைகுறை மனத்துடன் அருகில் இருக்கும் ஊருக்குள் போனான்.

உணவுக் கடையைக் கண்டுபிடித்து அவசர அவசரமாக சாப்பிட்டுப் பசியைத் தீர்த்துக் கொண்ட அவன், தன் நண்பனுக்காகவும் உணவை வாங்கிப் பொட்டலமாகக் கட்டிக் கொண்டான்.

அப்பொழுது ஒரு விபரீத எண்ணம் மணியின் மனதில் உதயம் ஆனது. ''கொண்டு செல்லும் உணவுப் பொட்டலத்தில் கொஞ்சம் நஞ்சைக் கலந்து விட்டால், பசியோடு இருக்கும் செல்வம் சாப்பிட்டு

எமனுடைய உலகிற்கு எகிறிவிடுவான். அப்புறம் பொற்குடம் முழுதும் என் ஒருவனுக்கே ஏகபோக உரிமையாகிவிடும்.''

இப்படி ஒரு எண்ணம் உண்டாகி அதை நொடியில் செயற்படுத்தவும் தீர்மானித்து, வாங்கிய உணவில் நஞ்சையும் கலந்து ஒருவருக்கும் தெரியா மல் விரைந்து வந்து சேர்ந்தான் மணி.

காட்டில் தனித்துப் புதையலுடன் காத்திருந்த செல்வத்தின் மனம் மட்டும் சும்மா இருக்குமா என்ன?

''உணவுடன் வரும் மணியின் தலைமீது மறைந் திருந்து ஒரு பாறாங்கல்லைப் போட்டால், மணி மரணதேவனுடைய மடியில் படுத்து ஒரேயடியாக உறங்கிவிடுவான். அப்புறம், புதையல் முழுவதும் என் ஒருவனுக்கே சொந்தமாகி விடும்.''

செல்வம் தான் நினைத்தபடியே ஒரு பாறாங் கல்லுடன் மறைந்து இருந்து, உணவுப் பொட்டலத் துடன் விரைந்து வந்த மணியின் தலைமேல் கல்லைப் போட்டான்.

இரத்தம் பீறிட, மணி நொடியில் சுருண்டு விழுந்து துடிதுடித்து உயிரை விட்டு விட்டான்.

அவன் பிணத்தை இழுத்துப் புதரோடு புதராக மறைத்த செல்வம், பசி தாள முடியாமல் உணவுப் பொட்டலத்தைப் பிரித்து, உண்ண அதில் மணி கலந்திருந்த கொடிய விஷம் செல்வத்தையும் நொடி யில் சாகடித்துவிட்டது.

இவ்வாறு உயிர் நண்பர்களான மணியமும் செல்வமும் மடிந்து கிடக்க, அவர்களின் உயிரைப் பறித்த புதையல் குடம் மட்டும் அங்கே அவர் களைப் பார்த்து முன்போல் சிரித்துக் கிடந்தது!

''ஆட்கொல்லி'' ''ஆட்கொல்லி'' என்று காலையில் அலறி ஓடிய சிவஞானி, மாலையில் மீண்டும் அந்தப் பக்கம் வந்தவர், இறந்து கிடந்த இருவரையும் புதையல் குடத்தையும் பார்த்து மிக வருத்தப்பட்டார். ''ஆட்கொல்லி இருக்கிறது. அங்கே போகவேண்டாம் என்று அப்பொழுதே நான் எச்சரித் தேன். கேட்டார்களா இவர்கள்! கேளாமல் அநியாய மாக மடிந்து விட்டார்களே!'' என்று அங்கலாய்த்த சிவஞானி மீளவும் தம் வழியே தாம் சென்று விட்டார்.

## அருளாளர் இவர்தாம்

வடலூரில் சத்தியத் தருமச் சாலை அமைத்து வந்தோர்க்கெல்லாம் வயிறார அமுது படைத்து ஜீவகாருண்யம் வளர்த்த அருட்பிரகாச வள்ளலார் தாம் பக்கம் 16இல் காணும் அருள்மொழி களை வழங்கிய அருளாளர் ஆவார்.

உயிரை வாட்டி வதைக்கும் எயிட்ஸ், இன் றைய உலகக் கண்டுபிடிப்பான சார்ஸ் போன்ற ''ஆட்கொல்லி'' நோயை விடவும் கொடிய நோய் பேராசை எனும் ''ஆட்கொல்லி'' நோயாகும் என் பதை உணர்ந்து கொள்க.

''லட்சமும் கோடியும் வேண்டாம் அடா! - அதை
ரட்சிக்க நம்மாலே ஆகுமோடா''

என்று பொருள் இல்லாதவர்கள் கவலையற்ற - களிப்பு மிகுந்த வாழ்வு வாழ்வதாகக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பாடியிருக்கக் காணு கின்றோம்.

உலகை ஆளக்கூடிய வேந்தரே ஆயினும், காட்டில் வாழுகிற வேடர்கள் ஆயினும் அவர் களுக்கு உள்ளது ஒரு சாண் வயிறு, உண்பது ஒரு நாழி சோறு. என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே

"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமா பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே''
(புறம். 189)

என்று நக்கீரர் பாடியிருக்கக் காணுகின்றோம்.

ஆகவே இறைவன் திருவடி ஏத்தும் செல்வமே செல்வம் என்று சிந்தை நிறைவு பெற்று நாம் வாழ முற்படுவோமானால் என்றும் இன்பம், என் றென்றும் இன்பம் என்பது திண்ணம்.

***

# திருமழபாடி வைத்தியநாத சுவாமி திருக்கோயிலும் நந்திதேவர் திருமணமும்

- கி. ஸ்ரீதரன், தொல்லியல் துறை, சென்னை.

காவிரி ஆற்றின் வடகரைத் தலங்களில் மிகச் சிறந்த தலமாக திருமழபாடி வைத்திய நாத சுவாமி திருக்கோயில் விளங்குகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் வட காவிரி எனப்படும் கொள்ளிடம் ஆற்றின் கரையில் இத் தலம் அமைந்துள்ளது. திருச்சிராப்பள்ளியிலிருந்து லால்குடி - திருமானூர் சாலையில் சுமார் 40 கி.மீ. தொலைவில் மனதுக்கு இதம் அளிக்கும் இயற்கை சூழ்நிலையில் இக்கோயில் அமைந்துள்ளது குறிப் பிடத்தக்கது.

பல்லவ மன்னரான ஐயடிகள் காடவர் கோன் நாயனார் தன்னுடைய சேத்திர வெண்பாவில்

''இழவாடிச் சுற்றத்தார் எல்லாரும் கூடி
விழவாடி ஆவி விடா முன்னம் - மழபாடி
ஆண்டானை ஆரமுதை அன்றயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை''

என்று மனம் உருகிப் போற்றுகின்றார்.

தேவார மூவரான ஞானசம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரர் மூவரும் இத்தலத்து இறைவனைப் போற்றிப் பாடியுள்ளனர். 'மழபாடி வைரத்தூண்' என்று இறைவனை நாவுக்கரசர் பெருமான் போற்று கின்றார்.

ஆலாலம் உண்டுகந்த ஆதிகண்டாய்
அடையவர் தம் புரமூன்றும் எய்தான் கண்டாய்
காலாலக் காலனையும் காய்ந்தான் கண்டாய்
கண்ணப்பர்க் கருள் செய்த காளை கண்டாய்
பாலாரும் மொழி மடவாள் பாகன் கண்டாய்
பசுவேறிப் பலிதிரியும் பண்பன் கண்டாய்
மாலாலும் அறிவரிய மைந்தன் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் தானே

- அப்பர்

''மழபாடி மருந்து'' என சம்பந்தர் பெருமான் போற்றுகின்றார்.

சந்தவார் குழலாளுமை தன்னொரு கூறுடை
எந்தையானி மையாத முக்கண்ணினன் எம்பிரான்
மைந்தன் வார் பொழில் சூழ் மழபாடி மருந்தினைச்
சிந்தியா யெழுவார் வினையாயின தேயுமே

- சம்பந்தர்

சுந்தரர் பெருமான் காவிரி தென் கரையில் உள்ள திருவாலம் பொழில் தலத்தை தரிசித்து விட்டு உறங்கும் பொழுது இறைவன் அவர் கனவில் தோன்றி மழபாடி வர மறந்தனையோ? எனக் கேட்க, சுந்தரர் பெருமான்

''பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடை மேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே''

என்று போற்றுகின்றார்.

### மழுவாடீசுவரர்

இத்தலத்து இறைவன் வைத்தியநாதர், மழுவாடீசுவரர், வைரத்தூண் நாதர், வச்சிரதம்பேசு வரர் என்றும்; இறைவி அழகம்மை (சுந்தராம்பிகை) என்றும் அழைக்கப்படுகின்றார்கள். இத்தலத்தின் தலமரமாக பனைமரம் விளங்குவதால் 'தாலவனம்' என இவ்வூர் அழைக்கப்படுகிறது. திருமால், இந்திரன் ஆகியோரும் வழிபட்ட தலமாகவும், சந்திரன் களங் கத்தை அகற்றியதால் வைத்திய நாதர் எனவும் அழைக்கப்படுவதாக புராண வரலாறுகள் கூறு கின்றன. இங்கே இறைவனை புருஷா மிருகம் வழி பட்டதால் வச்சிரதம்பேசுவரர் என்றும் அழைக்கப் படுவதாகவும் கூறப்படுகிறது.

### திருமழுவாடிப் புராணம்

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் அருளிய திருமழுவாடிப் புராணம் என்ற தல புராணம் இத்தலத்தின் பெருமைகளை எடுத்துக் கூறுகிறது.

மார்கண்டேய முனிவரின் பொருட்டு இறைவன் மழு ஏந்தி நடனமாடிக் காட்சி தந்தமையால் இத் தலம் மழுவாடி எனப்பெயர் பெற்றதாகவும் தல புராணம் கூறுகிறது. இக்கோயிலில் மழுவாடீசுவரர் என்ற திருமேனி வழிபடப் பெறுகிறார். தமது நான்கு கரங்களில் மேலிரு கரங்களில் சூலமும், பாசமும் ஏந்தியுள்ளார். வலது முன் கரம் மழுவை ஓங்கிய நிலையிலும், இடது முன் கரம் வலக்காலின் கீழே எமன் அலறித் துடிப்பதைக் காணலாம். தலபுராண வரலாற்றை எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ள இத்திருமேனி சிறப்பாக வழிபடப் பெறுகிறது. இது மட்டுமல்லாமல் ஒரே கல்லில் வடிக்கப்பட்ட சோமாஸ்கந்தர் திருமேனி, அபய - கரத்துடன் காட்சி தரும் ஆடவல்லானின் சிற்பம் போன்றவை இக் கோயிலுக்கு மேலும் பெருமை அளிக்கிறது.

## கல்வெட்டுகள்

இரண்டு கோபுரங்களும், மூன்று திருச்சுற்று களும் உடைய இக்கோயிலில் காணப்படும் 140க் கும் மேற்பட்ட கல்வெட்டுகள் தரும் செய்திகள் அரிய வரலாற்றுக் கருவூலமாக விளங்குகிறது. சோழ, பாண்டிய, போசள, விஜய நகர மன்னர்கள், அரியலூர் மழவராயர்கள் இக்கோயிலுக்கு பெருந் தொண்டு செய்துள்ளனர். இங்கு கோயில் கொண்டு விளங்கும் இறைவன் திருமழுவாடி ஆழ்வார், திருமழுவாடி உடையார், திருமழுவாடி மகாதேவர், திருமழபாடி உடையார் என்றெல்லாம் பெயரிட்டு அழைக்கப்படுவதைக் காண்கிறோம்.

இறைவன் அபிடேகத்திற்காக காவிரி ஆற்றி லிருந்து நீர் எடுத்து வரவும், பால் அபிடேகம் செய்ய வும், தும்பை மலர் சாற்றவும் தானம் வழங்கப் பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

## செம்பியன் மாதேவி

அரச மாதேவியர்களும், அரசகுல பெண்களும் பலர் தானமளித்துள்ளனர். குறிப்பாக செம்பியன் மாதேவி இக்கோயிலுக்கு பெருந் தொண்டு செய் துள்ளார். உத்தமசோழனின் தேவி மழபாடித் தென்னவன் மாதேவி எனக் குறிப்பிடப்படுகிறார். முதலாம் இராஜாதிராஜசோழன் கல்வெட்டில் பெண் கள் அதிகாரிகளாக இருந்ததைக் குறிக்கிறது. அவர் கள் 'அதிகாரிச்சி' என அழைக்கப்பட்டனர். அவ் வாறு இருந்த ஒரு பெண் அதிகாரி அரையன் உடை யாளர் என்ற பெயரில் இருந்ததை அறிகிறோம்.

இராஜராஜ சோழனின் படைத்தலைவரில் ஒருவன் மழபாடியாரான மும்முடி சோழன் என்பவர் குறிக்கப்பெறுகிறார். மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்தில் இவ்வூர் 'தீன சிந்தாமணி நல்லூர்' என்ற பெயரில் வழங்கப்பட்டது. மேலும் திருமழபாடியைச் சுற்றியுள்ள ஆலம்பாக்கம், பழுவூர், கண்டராதித்தம், செம்பியகுடி எனப்படும் செம்பியன் மாதேவிக்குடி என்ற ஊர்கள் வரலாற்றுச் சிறப்புடன் விளங்கு கிறது. சோழர் வரலாற்றில் திருமழபாடி திருக் கோயில் முக்கிய இடம் பெற்று விளங்குகின்றது என்றால் மிகையில்லை!

கோயிலுக்கு செல்வதற்கு முன்னர் கால் களை சுத்தம் செய்து கொள்கிறோம். இக்கோயில் வாயிலில் ஒரு கிணறும், தொட்டியும், அமைத்து அதில் நீர் நிரப்புவதற்கு ஒரு ஆளும் நியமிக்க தானம் அளிக்கப்பட்டதாக மூன்றாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டு கூறுகிறது. சேக்கிழார் பெருமான் பற்றி கூறும் கல்வெட்டும் இக்கோயிலில் உள்ளது. முத லாம் இராஜராஜசோழனின் 28-வது ஆட்சி ஆண் டில் இக்கோயில் விமானம் புதுப்பிக்கப்பட்டது. அப்பொழுது அதில் இருந்த கல்வெட்டுகள் ஏட்டில் எழுதி வைத்துக்கொண்டு, கோயில் புதுப்பிக்கப்பட்ட பின்னர் மீண்டும் கல்வெட்டுக்களைப் பொறித்த செய்தி அறியப்படுகிறது. கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள் அரிய வரலாற்றுச் செய்திகளை அள்ளித் தருகிறது. எனவே அதனைப் போற்றி காத்த செய்தியினை அறியும் பொழுது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

## நந்திதேவர் திருமணம்

திருமழபாடி கோயிலில் நடைபெறும் திரு விழாக்களில் பங்குனி மாதம் நடைபெறும் நந்தி தேவர் திருமண விழா மிகவும் சிறப்பானது. பங்குனி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் நந்திதேவருக்கும் சுயசாம்பிகை தேவிக்கும் திருமணம் நடைபெறு கிறது.

திருமணநாள் அன்று திருவையாற்றிலிருந்து சுவாமி ஐயாரப்பர், மாப்பிள்ளை நந்திதேவர், மணப் பெண் சுயசாம்பிகை தேவி ஆகியோர் திருமழபாடி வருகின்றனர். மாப்பிள்ளை நந்திதேவர் குதிரை வாகனத்தில் அழகிய மராத்திய கலைப்பாணியில் தலைப்பாகை அணிந்து வெள்ளி செங்கோலுடன் எழுந்தருளுகிறார். மணப்பெண் தனி பல்லக்கில் எழுந்தருளுகிறார். திருமழபாடி இறைவன் இறைவி யுடன் கண்ணாடி பல்லக்கில் எழுந்தருளி மாப்பிள்ளை வீட்டாரை கொள்ளிடம் ஆற்றில் எதிர்கொண்டு அழைக்கின்றனர். திருமழபாடிக்கு வரும் ஐயாரப்பருக்கும் நந்திதேவருக்கும் ஊர் மக்கள் சிறப்பான வரவேற்பு தருகின்றனர்.




அன்று மாலையில் கிழக்கு கோபுரம் அருகே திருமணம் நடைபெறுகிறது. மேடையில் நந்தி தேவர் புது மாப்பிள்ளையாக பெருமிதத்துடன் காட்சி தருகிறார். மணப்பெண் சீர் வரிசைகளுடன் அழைத்து வரப்படுகிறார். இருவருக்கும் அபிடேகம் சிறப்பாக செய்யப்பட்டு புத்தாடை அணிவிக்கப்படுகிறது. குருக்கள் திருமாங்கல்யத்தை எடுத்துதர நாத்தனார் எனப்படும் பெண், தாலியை சுயசாம்பிகைதேவி கழுத்தில் அணிவிக்கிறார். மக்கள் முகத்தில் மகிழ்ச்சி. திருமண வைபவம் முடிந்து தீபாராதனைக்கு பின்னர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்படுகிறது. நந்தி தேவரும், சுயசாம்பிகை தேவியும் தம்பதி சமேதர ராக வீதி வலம் வரும்பொழுது மக்கள் தங்கள் இல்லத் திருமணம் போன்று வீட்டை அலங்கரித்து மகிழ்ச்சி யுடன் வரவேற்கின்றனர். 'நந்தி கல்யாணம் பார்த் தால் முந்தி கல்யாணம்' என்ற சொல் வழக்கு இப் பகுதியில் வழங்கப்படுகிறது. இத்திருமணத்தைக் காண பக்கத்து கிராமங்களிலிருந்து மக்கள் திருமழ பாடி வருகின்றனர். இறை அருள் பெறுகின்றார்கள்.

வழிபாடு சிறப்பு மிக்க திருமழபாடி திருக் கோயில் சென்று வைத்தியநாத சுவாமி - சுந்தராம் பிகையை வழிபட்டு நலமடைவோம்! பங்குனி மாதம் நடைபெறும் நந்தி தேவர் - சுயசாம்பிகை தெய்வீகத் திருமணத்தையும் கண்டு மகிழ்வோம்!

***

# "சிறப்புமிக்க சேது ஸ்தலம்"

## (இராமேசுவரம்)

- பொறிஞர் ஜி. வெங்கடேசன், M.E., M.I.E.,
செயற் பொறியாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 34.

இமயம் முதல் ராமசேதுவரை பாபம் போக்கி மக்களுக்கு பெருவாழ்வும் பேரின்பமும் அளிக்கும் பல புண்ணிய தலங்களைத் தன்னகத்தே தாங்கித் திகழும் பாரத நாட்டிலே, வேதங்கள், ஸ்மிருதிகள், இதிஹாஸம், புராணங்கள் இவற்றால் புகழப்படும் பெருமை வாய்ந்த புண்ணிய தலங்கள் பல.

அவற்றுள் வடக்கே காசியும், தெற்கே ராமேசு வரமும் தனிச்சிறப்புடையவை. காசியில் தொடங்கப் பட்ட யாத்திரை இராமேசுவரத்தில் மூர்த்தியை வழி பட்ட பின்னர்தான் முடிவு பெறுகின்றது. காசிக்கு சென்ற பலன் கைகூடுவது இராமேசுவரத்தில்தான் என்பது ஆன்றோர் வாக்கு.

இராமேசுவரத்தின் பழமையும், புகழும் இராமாயண கால வரலாற்றோடு தொடர்புடையது. இந்த க்ஷேத்திரத்தில் செய்யப்படும் மஹா ஸங்கல்பத் தில் ''உபய ஸாகரயோர் மத்யே கந்த மாதன பர்வதே'' என்று இந்த க்ஷேத்திரம் கந்தமாதன பர்வத மாகவே குறிக்கப்படுகிறது.

கந்தமாதனம் என்ற பர்வதம் முன்பு ஸமுத்திரத் தின் நடுவில் ரிஷிகளால் மட்டும் காணத்தகுந்த தாய் இருந்தது. நளன் சேது (அணை) கட்டியபின் கந்த மாதன பர்வதம் யாவரும் காணும்படியாய் அமைந்தது. சேதுவிற்கு ஸ்நானம் செய்ய வருபவர் கள் இங்கு கந்தமாதன பர்வதத்தைப் பார்த்து ''தேவர் வசிக்கும் புண்ணிய பர்வதமே. விஷ்ணு முதலான தேவர்களும் உன்னை வணங்குகின்றனர். உன் மீது கால் வைத்து நடக்கும் என் குற்றத்தை பொறுத்துக் கொள். உன்மீது வசிக்கும் சங்கரனை நான் தரிசிக்க அருள்வாயாக'' என்று பிரார்த்திக்க வேண்டும் என்று கூறுகிறது இத்தல புராணத்தின் பத்தாவது அத்தியாயம். ஆகவே இந்த கந்தமாதன பர்வதத்தை உள்ளிட்ட அணைப்பகுதியே ராமேசுவரம் என்று ஊகிக்க முடி கிறது.

திருநாவுக்கரசு நாயனாராலும், திருஞான சம்பந்த சுவாமிகளாலும், கவிச்சக்கரவர்த்தி கம்ப நாட்டாழ்வாராலும் பாடப்பெற்ற இத்தலம் க்ஷேத்திரம், தீர்த்தம், மூர்த்தி என்ற மூன்றாலும் சிறந்து விளங்குகிறது.

இத்தலத்தின் பெருமையை பதினெண் புராணங்களிலே பதிமூன்றாவதாக கணிக்கப்படும் ஸ்ரீஸ்காந்தபுராணத்தின் பகுதியான ஸம்ஹிதையில் ''சேது மாஹாத்ம்யம்'' என்ற ஐம்பது அத்தியாயங்கள் கொண்ட பகுதி மிக விரிவாகவும், மிக அழகாக வும் விளக்கிக் கூறி உள்ளது.

வியாச மகரிஷியே சேது மஹாத்மியத்தில் ''இத்தலம் வேதங்களாலும், ஸ்மிருதிகளாலும், புராணங்களாலும் சிறப்பாக ஏகமுகமாகப் போற்றப் படுகிறது'' என்று குறிப்பிட்டிருப்பது ஒரு விசேஷ அம்சமாகும்.

இந்த சேது ஸ்தலத்தின் புகழைக் குறிக்கும் நான்கு வேத மந்திரங்களை வியாஸ மகரிஷி குறிப்பிட்டிருக்கிறார். அவற்றில் மூன்று, யஜுர் வேத தைத்தரீய ஸம்ஹிதையில் காணப்படுகின்றன. ஒரு மந்திரம் ரிக்வேத ஸம்ஹிதையில் காணப்படு கிறது.

''சேது மூலம் என்ற தர்ப்பசயனம்''

சேது தலத்திற்கு எல்லைகளான தர்ப்ப சயனம், தேவிபட்டினம். இவ்விரு எல்லைகளை சேது புராணம் சேது மூலம் என்றே பகருகிறது.

ஆஞ்சநேயர் மூலமாய் சுக்கிரீவனோடு சிநேகம் செய்து கொண்ட ஸ்ரீராமர் வாலியை வதைத்து சுக்ரீவனை கிஷ்கிந்தையில் அரசனாக்கினார். சுக்ரீவ னால் சீதையை தேடிவர அனுப்பப்பட்ட ஆஞ்சநேயர் இலங்கையில் சீதையைக் கண்டு, அவளிடமிருந்து சூடாமணி பெற்று அதை இராம ரிடம் சமர்ப்பித்தார். ராமர் வானர சேனைகளுடன் சக்ரதீர்த்தம்வந்துதங்கினார். (இது தர்ப்பசயனத்திற்கும் தேவி பட்டினத்திற்கும் நடுவில் பரவி இருக்கும் தீர்த்தம்).

இங்குதான் விபீடணன் இராமரிடம் சரணடைந்தான். பெருங்கடலை தாண்டி இலங்கை செல்ல விபீடணன் கூறிய யோசனைபடி ராமர் இப்பொழுது தர்ப்பசயனம் என்று கூறப்படும் இடத்தில் தர்ப்பங்களைப் பரப்பி அதில் லக்ஷ்மண ரோடு கூட ஸமுத்திரத்தை தியானித்து படுத்துக் கொண்டார். மூன்று நாட்கள் இவ்வாறிருந்தும் ஸமுத்திர ராஜனைக் காணாத ராமர் கோபமுற்று 'லக்ஷ்மணா, வில்லும், பாணமும் கொண்டுவா. சமுத்திரத்தை வற்றச் செய்து விடுகிறேன். வானரங் கள் காலாலேயே கடலை கடக்கட்டும்' என்று கூறி நாண்பூட்டி பாணத்தை தொடுத்தார்.

இதைக் கண்ட சமுத்திர ராஜன் ராமரைச் சரணடைந்து ''ஐயா! ஜலத்தின் சுபாவம் ஆழ்ந் திருத்தல். நான் தங்களுக்கு உதவி புரிகிறேன். நளன் என்றொரு வானர வீரன் உண்டு. அவன் விச்வகர்மா வின் புதல்வன். அவன் கையால் வைக்கப்படுகின்ற புல், கட்டை முதலானவைகளை போட்டு பாலம் கட்டுங்கள். அதை நான் தாங்குகிறேன். அதன் வழியே இலங்கை செல்லுங்கள்'' என்று கூறி மறைந் தார்.

ஸ்ரீராமரும் நளனைக் கூப்பிட்டு பாலம் அமைக்கச் சொன்னார். அவனும் ஏற்றான். வானரங் கள் மரம், மலை முதலியவைக் கொண்டு வந்து போட, நளன் அவைகளைக் கொண்டு பாலத்தை (சேது) கட்டி முடித்தான். ராமர் இலங்கைக்கு போக விரும்பி சேது கட்ட ஆரம்பித்த இடமே ''சேது மூலம்'' என்று கூறப்படுகிறது.

தேவி பட்டினமும் சேது மூலம் என்றே சொல்லப்படுகிறது. இதிலிருந்துதான் ராமேசுவர க்ஷேத்திரம் ஆரம்பமாகிறது. இங்குள்ள கடற்கரை யில் தான்ராமர் சுபமுகூர்த்தத்தில் விநாயகரையும், திலக ஸ்வாமி என்று ஸ்மிருதி புராணங்கள் கூறும் ஸ்கந்தனையும் வழிபட்டு தேவியின் அனுமதி பெற்று தம் கையால் ஒன்பது கற்களை நட்டார். பாஷாணம் என்றால் கல். நவ என்றால் ஒன்பது. இங்கு ராமர் ஒன்பது கற்களை நட்டதால் இவ்விடத் திற்கு ''நவ பாஷாணம்'' என்று பெயர் வந்தது. முன்னொரு சமயம் நடந்த தேவ அசுர யுத்தத்தில் மகிஷாசுரனை சம்ஹாரம் செய்த தேவி, தென் கடலின் வடக்கு பாகத்தில் தன் பெயரால் ஓர் பட்டினம் நிர்மாணித்தாள். தேவியால் உண்டாக்கப் பட்ட இப்பட்டினம் ''தேவீ பட்டினம்'' என்று பெயர் பெற்றது.

கோயிலை சுற்றியுள்ள பிரகாரங்களில் 22 தீர்த்தங்கள் (பெரும்பாலும் கிணறுகள்) உள்ளன. அவற்றில் குளிப்பதால் உடலும் உள்ளமும் தூய்மையடையும். தீர்த்தங்களில் மருந்துச் சத்துப் பொருட்களுடன் புனிதத் தன்மையும் கலந்திருக்கிறது.

**1. சக்ர தீர்த்தமாகிய தர்ம புஷ்கரணி**

தர்ம தேவதை, மகாதேவனைக் குறித்து இவ் விடம் தவம் செய்யும்போது ஸ்நானத்திற்காக இந்த தீர்த்தத்தை உண்டாக்கிற்று. ஆகவே இதற்கு 'தர்ம புஷ்கரணி' என்று பெயர். தர்மதேவதையின் தவத்திற்கு மகிழ்ந்து மகாதேவன் பிரஸன்னமானார். அவரைக் கண்டு தர்ம தேவதை வணங்கி பிரார்த்தனை செய்தது. மகிழ்ந்த பகவான் 'வரம் கேள்' என்று கூற தர்ம தேவதையும் ''நான் தங்களுக்கு வாகனமாய் இருக்கும் பேறு வேண்டும்'' என்று கூற அதன்படியே பகவான் அதை ரிஷப வாகனமாக்கிக் கொண்டார். அது முதற் கொண்டு இந்த தீர்த்தத்திற்கு தர்ம தீர்த்தம் என்று பெயர் வரலாயிற்று.

இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் புத்திர பேறு பெற்று முடிவில் அவன் விஷ்ணுபதம் எய்துவான்.

**2. க்ஷீரகுண்ட தீர்த்தம்**

முத்கல மகரிஷி செய்த யாகத்தினால் மகிழ்ந்த விஷ்ணு அவர் முன் தோன்றினார். 'வேண்டும் வரம் கேள்' என்று கேட்டதும் மகரிஷி 'ஐயனே! எனக்கு தங்களிடம் அசையாத பக்தியும், தங்களைத் திருப்திப் படுத்த காலையும் மாலையும் அபிஷேகம் செய்ய பாலும் அளித்தருள வேண்டும்'' என்று வரம் கேட்டார் முத்கல மகரிஷி.

உடனே பகவான் விசுவகர்மாவை அழைத்து ஸ்படிகத்தினால் ஒரு குளம் அமைக்க ஆணை யிட்டார். அவரும் அவ்வாறே செய்தார். காம தேனுவை அழைத்து 'இரண்டு வேளையிலும் நீ இங்கு பால் சொரிய வேண்டும்' என்று கட்டளையிட்டார். காமதேவனும் அவ்வாறே செய்ய, முனிவரும் விஷ்ணுவை திருப்திப்படுத்தினர். முடிவில் முக்தி யும் எய்தினர்.

இங்கு ஸ்நானம் செய்ய மாபாதங்கள் நீங்கும். முக்தி சித்திக்கும்.

**3. பாப விநாசம்**

இந்த தீர்த்தத்தை சாப்பிட்டாலும், இதில் மூழ்கினாலும் பாபங்கள் நீங்கும். இந்த தீர்த்தம் பாபத்தைப் போக்கி சொர்க்க மோக்ஷங்களை நல்கும்.



**4. சீதா தீர்த்தம்**

சர்வ தீர்த்தங்களும் தங்களை பரிசுத்தமாக்கிக் கொள்ள இதில் தங்கியிருக்கின்றன. காசி முதலிய சகல க்ஷேத்திரங்களும் இதை சேவிக்கின்றன.

சீதை அக்னிப் பிரவேசம் செய்து தன் கற்பை நிரூபித்த பின், லோக க்ஷேமத்தின் பொருட்டுத் தன் பெயரால் இதை உண்டாக்கி, இதில் ஸ்நானம் செய்தாள். அதனால் இதற்குச் சீதா தீர்த்தம் எனப் பெயர் வழங்கலாயிற்று.

இதில் ஸ்நானம் செய்ய பாபம், துக்கம், தாரித்திரியம் நீங்கி சம்பத்து உண்டாகும். வைகுந்த பதவி வாய்க்கும்.

**5. மங்கள தீர்த்தம்**

இந்த தீர்த்தம் சகல விதமான ஐசுவரியத்தையும் கொடுக்கும். இந்த தீர்த்தத்தில் ராமர் லக்ஷ்மியாகிய சீதையோடு லோக க்ஷேமத்திற்காக தங்கியிருந்தார்.

**6. அமிர்த வாவி தீர்த்தம்**

இங்கு ஸ்ரீராமர் வானரங்கள் கடலில் அணை கட்டும்போது சுக்ரீவாதியருடன் ராவணனைக் கொல்ல ஆலோசனை செய்தார். அப்போது கடலின் இரைச்சலால் ஒருவர் பேசுவது மற்றவருக்கு சரியாகக் கேட்கவில்லை. அப்போது ராமர் புருவத்தை நெரித்தார். அதனால் சமுத்திரம் அடங்கியது. அந்த சமயம் ராமர் அவர்களோடு ஏகாந்தமாய் யோசனை செய்ததால் 'ஏகாந்த ராமனாதம்' என்ற பெயர் வந்தது. இப்போது கூட அங்கு அலையிருப்பதில்லை.

இங்கேதான் அமிர்தவாவி தீர்த்தம் உள்ளது. இதில் ஸ்நானம் செய்தால் ஞானமில்லாதவர்கள் கூட முக்திபெறுவர்.

இமய மலைச் சாரலில் அகஸ்தியரின் சகோதரர் மோக்ஷத்தை விரும்பி சிவனைக் குறித்து கடும் தவம் செய்தார். மகிழ்ந்த சிவன் பார்வதி சமேதராய் விருஷபாரூடராய் தரிசனம் அளித்தார். அகஸ்திய சகோதரரை நோக்கி ''நீர் அமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் சுலபமாக முக்தி பெறலாம்'' என்று சொல்லி மறைந்தார். அவரும் இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து யோகத்தால் இச்சரீரத்தைவிட்டு முக்தி பெற்றார்.

இதில் ஸ்நானம் செய்தால் அமிர்தத்தவம் (முக்தி) கிடைக்கும்.

**7. பிரம்ம குண்டம்**

முன்னொரு சமயம் பிரம்மாவும் விஷ்ணுவும் யானே பெரியவன் என்று சண்டையிட்டுக் கொள்ள அவர்களுக்கிடையில் ஜோதி வடி வாகிய சிவன் தோன்ற 'எவர் அடியையும் முடியையும் காண்பாரோ, அவரே பெரியவர் 'என்று கூற, பிரமன் 'சிரசைக் கண்டேன்' என்று பொய் பகன்றார். அது கேட்ட மகேசுவரன், ''பிரம்மனோ நீர் பொய் சொன்னீர், ஆக உமக்கு எங்கும் பூஜை கிடைக்காது'' என்று சொல்லி சாபமிட்டார். விஷ்ணுவிடம், 'நீர் உண்மை கூறியபடியால் எமக்கு சமமான பூஜை உமக்கு கிடைக்கும்'' என்றும் கூறினர். குற்றம் பொறுத்தருள வேண்டும் என்று கேட்டுக் கொண்ட பிரம்மனிடம் ''பிரம்மனே, கந்தமாதனத்தில் சென்று யாகங்களைச் செய்யும்'' என்று கூற, பிரம்மன் பல யாகங்களைச் செய்தார். திருப்தியடைந்த மகாதேவர் பிரசன்னமாகி, ''நீர் யாகம் செய்த இவ்விடம் பிரம்ம குண்டம் எனப் பெயர் பெறும். இங்கு உண்டான விபூதியை தரித்துக் கொண்டவன் மாயை விலகி முத்திபெறுவான் மேலும் இவ்விபூதியை தரித்தால் பஞ்சமாபாதங்களும் நீங்கும்'' என்று கூறி மறைந்தார். பிரமனும் சத்யலோகம் சென்றான்.

இங்குள்ள விபூதியை தரித்துக் கொள்வது புண்ணியத்தை நல்கும்.

**8. ஹனுமத் குண்டம்**

ராவண சம்ஹாரம் முடிந்தபின் அனுமார் உலகம் உய்ய இந்த தீர்த்தத்தை தன் பெயரால் உண்டாக்கினர். இதுவும் பாபத்தை போக்கும்.

**9. அகஸ்திய தீர்த்தம்**

அகஸ்தியர் சிவபெருமான் அருளாணைக் கிசைந்து பார்வதி கல்யாண காலத்தில் தென்னாடு வந்து பூமியை சமன்செய்தார். கந்தமாதனம் வந்து அங்கு தன் பெயரால் ஒரு தீர்த்தத்தை உருவாக்கினர். தன் மனைவி லோபா முத்திரையுடன் அங்கேயே வாசம் செய்து கொண்டிருக்கிறார்.

இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தீர்க்க தபஸ் என்ற முனிவரின் புதல்வன் கக்ஷுவான், மனோரமையை மணந்தான்.

இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் ஸர்வாபீஷ்டமும் மோட்சமும் கிடைக்கும்.

**10. இராம தீர்த்தம்**

இங்கு அகஸ்திய சிஷ்யரான சுதீர்ஷ்ணர் என்ற ரிஷி ராமரைக் குறித்து தவம் செய்து சகல சித்திகளும் பெற்றார்.

தர்மபுத்திரரும் பொய்கூறிய பாபத்தினின்று விடுபட்டார். பாரத யுத்தத்தில் பாண்டவர் வெற்றி பெற கிருஷ்ணர், பாண்டவரை நோக்கி ''அசுவத்தாமா, யுத்தத்தில் இறந்தான் என்று நம்பத் தகுந்த சத்யவான் ஒருவன் கூறினால் துரோணர் ஆயுதங்களை தியாகம் செய்து விடுவார். வெற்றி கிட்டும்'' என்று கூறினர். பீமன் துரோணரிடம், 'உம் பிள்ளை அசுவத்தாமா யுத்தத்தில் இறந்தான்' என்று பொய் கூறினன். துரோணர் அதை நம்பவில்லை. தருமரிடம் வந்து உண்மையா என்று கேட்க, தருமரும் கபடமாக, 'பீமனால் அசுவத்தமா கொல்லப்பட்டான்' (அசுவத்தாமா என்ற பெயர் கொண்ட யானை பீமனால் கொல்லப் பட்டது) என்று கூற, துரோணர் யுத்த களத்தை விட்டுத் திரும்பினர். துரோணர் தலையை த்ருஷ்டத்யும்னன் கத்தியால் வெட்டினான். பின் பாண்டவர்கள் கௌரவர்களை வெற்றி கொண்டு ஹஸ்தினபுரம் சேர்ந்தனர்.

பின் தர்மர் பட்டாபிஷேகம் செய்து கொள்ளும்போது ''தர்மரே! நீர் பொய் கூறி துரோணரைக் கொன்றீர். அந்த பாபத்தை போக்கிக் கொண்டபின் ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று அசரீரி கேட்க, தர்மர் வியாசரை பிராயசித்தம் கேட்க அவரும், 'அரசே! ராமரால் உண்டாக்கப்பட்ட தீர்த்தத்தில் ஸ்நானம் செய். அதன் கரையில் நிறைய தானங்கள் செய். உன் பாபம் நீங்கும் என்று கூறினார்.

தருமரும் இராம தீர்த்தம் வந்து ஒரு மாத காலம் நியமமாய் நீராடி பாபம் நீங்கப்பெற்று பட்டாபிஷேகம் செய்து கொண்டார்.

இந்த தீர்த்தம் பாபங்களைப் போக்கி முக்தி முக்திகளைக் கொடுக்கும் வல்லமையுடையது.

**11. லஷ்மண தீர்த்தம்**

லஷ்மணர் இந்த தீர்த்தக் கரையில் சிவ லிங்கத்தை பிரதிஷ்டை செய்திருக்கிறார். இங்கு ஸ்நானம் செய்து லஷ்மண லிங்கத்தை பூஜிப்போர் தாரித்திரியம், ரோகம் இவைகள் நீங்கி ஸம்ஸாரத்தி னின்றும் விடுபடுவர். இந்த தீர்த்தத்தையும், லிங்கத்தையும் வழிபட்டதன் பலனாக பலராமர் பிரம்ம ஹத்தியினின்றும் நீங்கினர் என்று புராணங்கள் கூறும்.

**12. ஜடா தீர்த்தம்**

இந்த ஜடா தீர்த்தம் சகலருக்கும் அக்ஞானத்தைப் போக்கி ஞானத்தை நல்க பரமசிவனால் உண்டாக்கப்பட்டதாகும். ராவணனை அழித்தபின் ஸ்ரீராமர் தன் ஜடையை இதில் அலசிக் கொண்டதால் இதற்கு 'ஜடா தீர்த்தம்' எனப் பெயர் உண்டாயிற்று.

சுகர் தன் பிதாவாகிய வியாசரை வணங்கி தந்தையே எனக்கு மனத்தெளிவு ஏற்படவில்லை. இதற்கு உபாயம் கூறும்'' என்று கேட்க, வியாசர், ''பிருகு முனிவர் தன் பிதாவாகிய வருணனின் சித்தசுத்திக்கு உபாயங் கேட்க, அதற்கவர் சேதுவில் கந்தமாதனத்திலுள்ள ஜடாதீர்த்தத்தில் ஸ்நானம் செய். அது சித்த சுத்தியைத் தரும்'' என்று கூறினர்.

அதன்படி செய்து பிறகு மனத்தெளிவு பெற்று ஞானியாய் பரமசொரூபமெய்தினர். இவ்வாறே துர்வாசரும் தத்தாத்திரேயரும் இங்கு ஸ்நானம் செய்து பிரும்மானந்தமடைந்தனர். சுகரும் ஜடாதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மனத் தெளிவு பெற்று பரமானந்தம் அடைந்தார். இதன் மகிமை அளவில் அடங்காதது.

### 13. லஷ்மி தீர்த்தம்

இதில் ஸ்நானம் செய்தால் தனதான்யப் பெருக்கு உண்டாகும். ஒரு சமயம் தர்மர் கிருஷ்ணனைப் பார்த்து, ஐசுவரியம் பெருக வழி கூறும் என்று கேட்க கிருஷ்ணரும் கந்தமாதனத் தல் லஷ்மி தீர்த்தமென்று ஒன்று இருக்கிறது. அதில் ஸ்நானம் செய்து குபேரன் நிதிகளுக்கு அதிபதியானான். அவர் பிள்ளை நளகூபரன் அழகி யான ரம்பையை அடைந்தான். ஆகவே அதில் ஸ்நானம் செய்தால் உமக்கும் ஐசுவரியம் அபரிமித மாக ஏற்படும்'' என்று கூற அவரும் அவ்வாறே ஸ்நானம் செய்து சகல ஐசுவர்யத்தையும் அடைந்தார்.

### 14. அக்னி தீர்த்தம்

ராமேசுவரத்தில் உள்ள தீர்த்தங்களில் சிறப் புடையது. மிகவும் பிரசித்தமானது. இது மஹாபாதகங் களைப் போக்கி புண்ணியத்தைப் பெருகச் செய்யும்.

ஸ்ரீராமர் ராவண சம்ஹாரம் செய்து, விபீடணுக்குப் பட்டங்கட்டி விட்டு, தேவர் புடைசூழ கந்தமாதனம் வந்தார். சீதை பரிசுத்தமாகும் பொருட்டு லஷ்மி தீர்த்தக் கரையில் நின்று யாவரும் காண அக்னி பகவானை அழைத்தார். அவரும் தோன்றி சீதையின் கற்பினால் தான் நீர் ராவணனை வென்றீர். சீதா தேவியை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று வேண்டி னார். ஸ்ரீராமர் சீதையின் சுத்திக்காக அழைத்த அக்னி பகவான் சமுத்திரத்தினின்றும் தோன்றியவிடமே அக்னி தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது.

இங்கு அன்னதானமும், மற்றைய தானமும், வேத வித்துக்களுக்கு செய்வோர் விஷ்ணு ஸாயுஜ்யம் பெறுவர். இங்கு ஸ்நானம் செய்து துஷ்புண்ணியன் என்பான் பேறு பெற்றான்.

### 15. சக்ர தீர்த்தம்

இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் விரும்பியவை எல்லாம் கிடைக்கும். ஸ்நானம் பண்ணு கிறவர்களுக்கு அரக்கர், பிசாசு முதலியவற்றால் தீங்கு நேராது.

முன்பு அஹிர்புத்னியர் என்ற ரிஷி இங்கு சுதர்சனம் என்ற சக்கரத்தை குறித்து தவம் செய் தார். அவரது தவத்திற்கு இடையூறு விளைவித்த அரக்கனை சம்ஹரித்து, அவர் வேண்டுகோளின்படி இந்த தீர்த்தத்தால் சுதர்சனம் என்ற சக்கரம் வாசம் செய்வதால் இதற்கு சக்ர தீர்த்தம் என்றுபெயர் வந்தது.

### 16. சிவதீர்த்தம்

இது சிவனால் உண்டாக்கப்பட்டதாகும். கால பைரவர் சிவ தீர்த்தத்தில் மூழ்க பிரம்மஹத்தி நீங்கியது. இத்தீர்த்தத்தில் மூழ்க பாதகங்கள் நீங்கும்.

### 17. சங்க தீர்த்தம்

இது சங்கர் என்ற ரிஷி விஷ்ணுவைக் குறித்து தவம் செய்கையில் ஸ்நானத்திற்காக ஏற்படுத்தப் பட்டதாகும். ஆகவே இதற்கு சங்க தீர்த்தம் என்று பெயர் வந்தது.

### 18. யமுனை, கங்கை, கயை

இம் மூன்று தீர்த்தங்களும் அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞானத்தை நல்க வல்லவை.

ஒரு காலத்தில் ரைக்குவர் என்ற மகரிஷி கந்தமாதனத்தில் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் முடவர். அங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்ய வண்டியில் செல்வார்.

அவருக்கு யமுனை, கங்கை, கயா தீர்த்தங்களில் ஸ்நானம் செய்ய அவா பிறந்தது. ஆகவே அவர் தம் தவ வலிமையினால் மூன்று தீர்த்தங்களையும் அழைக்க அவை பூமியிலிருந்து அங்கு தோன்றின. அவர் அவைகளை இங்கேயே நித்தம் தங்கும்படி வேண்டினார். அவைகளும் சம்மதித்தன. அம் மூன்றும் தாம் தோன்றிய இடத்தில் இப்பொழுதும் யமுனை, கங்கை, கயை என்ற தீர்த்தங்களாக விளங்குகின்றன. அவைகளில் ஸ்நானம் செய்து வாழ்ந்து வந்தார்.

### 19. வேதாள வரத தீர்த்தம்

இந்த தீர்த்த துளிகள் கபாலஸ்போடன் மீது பட அவன் வேதாள தன்மை நீங்கி பழைய பிராமண வடிவம் பெற்றான். இங்கு ஸ்நானம் செய்தவர் ஜீவன் முக்தராவர்.

### 20. கோடி தீர்த்தம்

ராமர் ராவண ஸம்ஹாரத்தினால் ஏற்பட்ட பிரம்மஹத்தி நீங்க சிவலிங்கம் பிரதிஷ்டை செய்

தார். அபிஷேகம் செய்ய நல்ல ஜலம் கிடைக்காமை யால், தன் வில்லின் நுனியால் பூமியை பிளந்தார். அங்கிருந்து பாதாள கங்கை பொங்கி வந்தாள். தனுசின் கோடியால் (முனையால்) உண்டாக்கப் பட்டதால் இதற்கு கோடி தீர்த்தம் என்ற பெயர் வழங்கலாயிற்று. ராமர் இந்த ஜலத்தால் அபிடேகம் செய்து விட்டு, தானும் ஸ்நானம் செய்து அயோத்தி சென்றார்.

இதில் ஸ்நானம் செய்தால் பாபங்கள் போகும். கெட்ட கனவுகள் தீமை செய்யா. விக்னம் விலகும். சாந்தியும் சம்பத்தும் வரும். கிருஷ்ணரும் இதில் ஸ்நானம் செய்து தன் மாமனைக் கொன்ற தோஷத்தினின்றும் விடுபட்டார்.

**21. சத்யாமிருத தீர்த்தம்**

இந்த புண்ணியமான தீர்த்தத்தில் பலனை விரும்பி ஸ்நானம் செய்பவரின் விருப்பம் பூர்த்தி யாகும். பலன் விரும்பாமல் ஸ்நானம் செய்பவர் மோக்ஷமடைவார். இதில் ஸ்நானம் செய்பவர்களுக்கு அமிர்தம் என்ற மோக்ஷம் ஸாத்யமாயிருப்பதால் (கிடைப்பதால்) இத்தீர்த்தத்திற்கு ஸாத்யாமிருத தீர்த்தம் எனப் பெயர் வழங்கலாயிற்று.

**22. ஸர்வ தீர்த்தம்**

முன்னொரு சமயம் பிருகு வம்சத்தினரான சுசரிதர் என்றொரு ரிஷி இருந்தார். குருடரும் கிழவருமாகிய அவர் சிவனைக் குறித்து கடும் தவம் செய்தார். தவத்திற்கு மகிழ்ந்து தோன்றிய சிவன் பார்வையளித்து அவரிடம் வேண்டும் வரங் களைக் கேள் என்று கூற மகிழ்ந்த முனிவர், ''ஐயனே நான் கிழவனாயிருப்பதால் இந்த இடத்தை விட்டுச் செல்ல சக்தியில்லை. ஆயினும் எல்லாப் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதற்கு அருள வேண்டும்'' என்று கூற உடனே சிவன் ''சர்வ தீர்த்தங்களும் இந்த கந்தமாதன பர்வதத்தில் வா வேண்டும்'' என்று நினைக்க அப்படியே அவை வந்தன. சிவன் மனத்தி னால் இவை வரவழைக்கப்பட்டால் ''மானச தீர்த்தம்'' என்றும், எல்லாத் தீர்த்தங்களும் இதில் இருப்பதால் ''ஸர்வ தீர்த்தம்'' எனப் பெயர் பெற்றது.

சிவன் ரிஷியை நோக்கி, ''இதில் ஸ்நானம் செய்யும்'' என்று கூறினர். ரிஷி அதில் ஸ்நானம் செய்ய அவர் கிழடு நீங்கி அழகிய இளைஞரால் திகழ்ந்தார். சுசரிதரும் பல்லாண்டு அங்கிருந்து கடைசி யில் சிவஸாயுஜ்யம் பெற்றார்.

**23. கபி தீர்த்தம்**

ராவண ஸம்ஹாரத்திற்குப் பிறகு ராமரோடு ராமேஸ்வரம் வந்த கபிகள் (குரங்குகள்) தம் பெய ரால் இத்தீர்த்தத்தை உண்டாக்கின. ராமரும் இந்த தீர்த்தத்தில் மூழ்குபவர்க்கு எல்லா பலன்களும் கிடைக்கும் என்று வரமருளின.

**24. காயத்ரீ, ஸரஸ்வதி தீர்த்தங்கள்**

முன்னொரு சமயம் பிரம்மனை சிவன் கொன்று விட்டார். பிரம்மனின் மனைவிகளாகிய காயத்ரியும், சரஸ்வதியும் பிரம்மனை மீண்டும் பெற வேண்டி, கந்தமாதனம் வந்து சிவனைக் குறித்து தவம் செய்தனர். தங்களுடைய ஸ்நானத்திற்காக தங்கள் பெயரால் இரண்டு தீர்த்தங்களை உண்டாக்கிக் கொண்டார்கள்.

அவர்களின் தவத்தை மெச்சிய சிவன் அவர் கள் விருப்பப்படி பிரம்மதேவனை உயிர் பிழைக்கச் செய்தார்.

சிவன் காயத்திரியையும் சரஸ்வதியையும் பார்த்து ''நீங்கள் பிரம்மனுடன் பிரம்ம லோகம் சென்று வாழுங்கள். இந்த தீர்த்தங்களில் உங்க ளுடைய அம்சம் எப்பொழுதும் தங்கியிருக்கட்டும்'' என்று கூறி மறைந்தார்.

இதில் ஸ்நானம் செய்ய சிவவிஷ்ணுக் களின் அனுக்கிரகமும், ஸர்வ சித்திகளும் கைக்கூடும்.

ஸ்ரீராமேசுவரம் கோயில் மிகப் புராதனமானது. இதில் விளங்கும் சிவலிங்கம் ஸ்ரீராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பெருமையுடையது.

சேது தீர்த்தத்தில் நீராடி இராமேசுவரத்தை வழிபட்டால் மக்கட்பேறு கிடைக்கும் என்று இந்துக்கள் எல்லோரும் நம்புகின்றனர். ராமேசுவரத் தில் உள்ளவர்கள் சீதாபிராட்டி மணலில் லிங்கப் பிரதிஷ்டை செய்ததால் தங்கள் நிலங்களை எருது கள் கொண்டு இப்போதும் உழுவதில்லை. இங்கே எண்ணை ஆட்டும் செக்குகளும் இல்லை.

உலகப் புகழ் பெற்ற வெளிப்பிரகாரத்தில் வட கிழக்கு மூலையில் நடராஜர் சன்னதி அமைந்துள்ளது. இங்குள்ள நடராஜ விக்ரகம் மற்ற கோயில்களைக் காட்டிலும் பெரியதாக உள்ளது. இச்சன்னதியில் ருத்ராட்ச மணிகளால் விமானம் அமைக்கப்பட் டுள்ளது கண் கொள்ளாக் காட்சியாகும்.

1212 தூண்களும், 2250 அடி சுற்றளவும் கொண்ட மூன்றாம் பிரகாரம் உலகப் புகழ் பெற்றது.

***

# மயிலையிலே மலர்ந்திருக்கும் முண்டகக் கண்ணி அம்மா!

- திருமதி உமா சுப்பிரமணியன்



மயிலையிலே மலர்ந்திருக்கும்
முண்டகக் கண்ணியம்மா!
மனதிலொரு கவலையென்றால்
நினைப்பது உன்னையம்மா! (மயிலையிலே)

அழகு விழி திறந்து அகிலம் பார்ப்பவளே!
நல்ல வழி பிறக்க அருளைத் தருபவளே!
ஊருக்கொரு பேரு கொண்டு உலகையாள்பவளே!
எனக்கொரு குறை என்றால் உடனே தீர்ப்பவளே!
(மயிலையிலே)

நீ புன்னகைத்தால் போதும்
வையம் பூங்காவனமாகும்!
நீ கண்பார்த்தால்போதும்
வயல் நெற்களஞ்சியமாகும்! (மயிலையிலே)

ஆலயங்கள் தோறும் அசையாது நிற்பவளே!
அனுதினமும் அகிலத்தை ஆட்டியே படைப்பவளே!
ஆணாகப் பெண்ணாக நமக்குள் இருப்பவளே!
சூழ வரும் சூழ்ச்சிகளை சூலத்தால் தடுப்பவளே!
(மயிலையிலே)

மஞ்சள் அபிஷேகம் மங்கலம் காத்திடவே
குங்கும அபிஷேகம் குலங்கள் தழைத்திடவே
மலரால் அபிஷேகம் நாளும் செய்தோமே
புலரும் பொழுதெல்லாம் நலமாம் யாவர்க்குமே!
(மயிலையிலே)

எங்கும் நிறைந்தவளே
யாவும் அறிந்தவளே
தங்கும் புகழ் வேண்டித்
தாளைத்தினம் பணிகின்றோம். (மயிலையிலே)

மங்காத புகழ்ச் செல்வம்
தந்தெம்மை வாழவைப்பாய்.

# மகிரிஷி ரமணர்

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

ரமணா, ரமணா, ரமணா,
ரமணா, ரமணீயம் தரவா.

மனிதரின் மத்தியில் மகேசனாய் வாழ்ந்தாய்,
மகரிஷி ரமணா மறைந்தே ஒளிர்ந்தாய்,
தனிமையின் இனிமையில், சாம்ராஜ்யம் கண்டாய்,
சமத்துவம் உயிர்களில் சமமாய்க் கண்டாய்
(1)

ஆடையைத் துறந்து, அமைதியை ஆடையாய்,
அணிந்ததால் அமைதிக்கு அழகினைச் சேர்த்தாய்,
ஓடையில் ஓயாது ஓடிவரும் நீர்போல்,
உலகினில் இறைவழி ஓடிவரச் செய்தாய்.
(2)

அமைதியில் நிகழ்ந்திடும் ஆயிரம் அற்புதம்,
அறியாத மனிதரை அறியநீ வைத்தாய்,
சுமைதாங்க நினைப்போர், சுயநலம் தேடுவோர்!
''சும்மா இருந்தால் சுகம் வரும்'' என்றாய்,
(3)

இருப்பதும், நடந்ததும், ஈசன்செயலால்,
இனிமேல் வருவதும் ஈசன் முடிவால்,
கருத்தோடு அறிந்தோர் கவலையில் மூழ்கார்,
கடமைகள் செய்வார், கடவுளைக் காண்பார்,
(4)

கேள்விகள் கேட்போர், கிடைத்திடும் பதிலில்,
கேளாத நெறிமுறை கேட்டறியச் செய்தாய்,
வேள்விகள் வேண்டாம், வேண்டாத ஆசைகளின்
விடுதலை விளைத்திடும் வீடுபேறு என்றாய்,
(5)

சமாதி நிலையில் சர்வேஸ் வரனின்,
தடயச் சுடர்ஒளி, தடயம் பலபல,
இமால யத்தையும் எட்டிடச் செய்யும்
ஈஸ்வர நிகழ்வுகள் இயங்கிடச் செய்தாய்,
(6)

இறைவனே உன்னுள் எழுந்ததின் விளைவால்,
இறைவனைத் தேடி எங்குமே சென்றிலை,
அறைகூவி மாந்தரை அழைத்ததே இல்லை,
அகிலமே திரண்டுன் அடிசேரக் கண்டோம்,
(7)



கூட்டத்தின் நடுவில் குறையாத தனிமையும்,
கூச்சலின் மத்தியில் குலையாத மௌனமும்,
ஆட்டத்தின் நடுவில் அசையாத உடலும்,
அலுங்காத மனமும், ஐயாஉன் அணிகலன்,
(8)

மௌனத்தின் அமைதியில் மகேசனாய் நின்றாய்,
மலர்ந்திடும் சிரிப்பில் மருள்கள் நீக்கினாய்,
மௌனத்தின் உரத்த மலர்ந்திடும் குரலால்,
மாந்தரின் அஞ்ஞான மயக்கம் போக்கினாய்,
(9)

உன்கண் ஒளியில், ஒளிர்வான் இறைவன்,
உன்வாய் மௌனம் உரக்கப் பேசிடும்,
அண்ணா மலைதனில் அற்புதம் நிகழ்ந்திட,
அகிலமே திரண்டு அதிசயம் கண்டதே, (10)

நீவாழ்ந்த அண்ணா மலைவந்து கண்டோம்,
நின்நாம எதிரொலி நிலமெங்கும் கேட்டோம்,
நீவாழ்ந்த போது, யாம்வாழ்ந்த பேறு,
நிலைக்காத வாழ்வதன் நிரந்தரப் பேறே, (11)

ரமணா, ரமணா, ரமணா,
ரமணா, ரமணீயம் தரவா.

# அலங்காரத்தில் அற்புத அறிவுரைகள்

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

அருணகிரியார், திருவருணக் கோபுரத்தில் முருகனை நேரில் தரிசித்த பிறகே, அவனருளால் பாடப்பட்ட பாடல்களே, திருப்புகழ், கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தரனுபூதி, திருவகுப்பு போன்றவைகளாகும். பொதுவாக, ஏனைய அருளாளர்கள் பாடிய பாடல்களுக்கு, தாங்களாகவோ, அல்லது ஏனைய ஆன்றோர் களாலோ, தலைப்பு தந்தபோதிலும், அருணகிரியார் பாடலுக்கு, வயலூர் பொய்யாகணபதியே, திருப்புகழ் எனும் தலைப்பு தந்தது, அறிந்து மகிழ்தற்கு உரிய தாகும். இத்தகு பெருமை வாய்ந்த திருப்புகழை, ஆபாசமான காமவெறியூட்டும் நிகழ்ச்சிகளை பல வித கோணங்களால் பாடியுள்ளார் என நினைப்பது வீண்பழியாகும். அருணகிரியாரது பாடல்களின் பெருமையை, சுவையை உணராதவர் கூறும் உரை யாகும். அவரது பாடல்களில் பிற மதவெறுப்பை காணமுடியாது. சமையலறையில், அஞ்சறை பெட்டி யில் பலவித தானியங்கள் அடங்கியுள்ளது போன்று, சைவ வைணவ சம்பந்தமான பல நூல் களையும் படித்து அறிய வேண்டிய கருத்துக்கள் யாவும் அவரது பாடல்களிலேயே பொதிந்துள்ளதை காணலாம். முருகனையே முதற் தெய்வமாகவைத்துப் பாடின அவர் தம் கவிகளில் இராமாயணம், மகா பாரதம், நாயன்மார்கள் வரலாறுகள், கந்தபுராணம் பற்றிய வரலாறுகளையும் காணலாம்.

அருணகிரியாரது பாடல்கள் அனைத்தும் மக்கள் சமுதாயத்தின் நலனைக் குறித்தே எக்காலத் துக்கும் பொருந்தும் விதத்தில் அமைந்துள்ளதைக் காணலாம். இதுதான் சமரஸ நோக்கம் எனப்படும். பொதுவாக பலருக்கு பயன்படும்படி ஒன்றை உரைப் பதுதான் உயர்ந்த உரையாகும். அறிவுள்ளோர், அருள் பெற்றோர், புலமையுள்ளோர் கூறும் மொழிகளில் இத்தகைய பொதுத் தன்மையைக் காணலாம். அருண கிரியாரும் இதற்கு விதிவிலக்கு அல்ல. இதற்கு உதாரணமாக, ''ஒரு பானை சோற்றுக்கு, ஒரு சோறு பதம்'' எனும் முது மொழிக்கேற்ப, அவரால் பாடப் பட்ட கந்தரலங்காரப் பாடல் ஒன்றை ஆராய்வோம்.

''தடுங்கோள் மனத்தை, விடுங்கோள் வெகுளியை,
தானமென்று
இடுங்கோள், இருந்தபடி இருங்கோள் -
எழுபாருமுய்ய
கொடுங்கோபச் சூருடன் குன்றம் திறக்க
தொளைக்க வைவேல்
விடுங்கோன் அருள்வந்துதானே உமக்கு
வெளிப்படுமே''

இது அருணகிரியாரின் அத்தாட்சிப் பத்திரம்.

மனத்தை ஐம்புலன்கள் வழி செலுத்தாது தடுத்து நிறுத்தவேண்டும். காணும் பொருள்கள் மேல் எல்லாம் பறிகொடுக்காமல் தடுத்தல்வேண்டும். செவிக்கு அழியக்கூடிய இன்பம்தரும் நிகழ்ச்சி களைக் கேட்பதிலோ, மனத்தை தாராளமாக செல விடாது தடுத்தல்வேண்டும். மூக்கு விரும்பும் வாசனைப் பொருள்களை எல்லாம் நுகர்வதற்கு இடமளிக்கக்கூடாது. நாக்கு விரும்பும் சுவைகளை எல்லாம் சுவைக்க இடம் தரலாகாது. இவற்றிற் கெல்லாம் மனத்தை கட்டுப்படுத்த அறிந்து கொள்ள வேண்டும். இதுவே மனத்தை தடுக்கும் வழியாகும்.

அடுத்து, பொறுமையுடன் வாழப்பழகிக் கொள்ளவேண்டும். வெகுளி - சினம் - கோபம் தோன்ற இடம் தரலாகாது. சினத்தைப்போல மனிதனை சீரழிப்பது வேறொன்றுமில்லை. இதோடு பொருந்தி வாழ்ந்தவர்களெல்லாம், பல இன்னல்களுக்கு ஆளாவர். சினம் உள்ளவர்களிடம், உறவினர் மட்டு மின்றி, ஏனையோரும் சுமுகமாக பழகமாட்டார் கள். ஆதலால் கோபத்தை தவிர்த்து, பொறுமையை கையாண்டு வாழப்பழகிக்கொள்ளுதலே நலம்.

உதாரணத்திற்கு, கர்ணன், பானுமதியோடு தனித்திருந்து சூதாடும் சமயம் துரியோதனன் வந்ததை அறிந்த பானுமதி எழுந்து நின்றாள். அது சமயம் கர்ணன் அவளது ஆடையை பிடித்து இழுக்க வும், அதிலிருந்து மணிகள் சிதறியது. இச்சூழ் நிலையில் எவரும் மிருகத்தனமாக மாறும் நிலை யில் செயல்படுவது இயல்பே. ஆனால் துரியோதனன் அதற்குமாறாக, மனத்தை அடக்கியதோடு, கோபமும் கொள்ளாது கர்ணனிடம் சிதறிய மணிகளை ''எடுக்கவோ, கோக்கவோ'' எனக் கூறியதிலிருந்து துரியோதனனின் உயரிய பண்பை அறியமுடிகிறது, அருணகிரியார் கூறிய ''தடுங்கோள் மனத்தை - விடுங்கோள் வெகுளியை'' எனும் வாசகத்தோடு பொருத்திப்பார்த்தால், எளிதில் இதன் ஆழமான

கருத்து புலப்படும். துரியோதனன் முதலில் ஆத்திரம் கொள்ளாது மனத்தைத் தடுத்தான். அதோடு வெகுளியையும் அறவே அடக்கினான். இச்செயலே எக்காலத்துக்கும் துரியோதனனை ஒப்புயர்வற்ற நாயகனாக எடுத்துக் காட்ட உதவும் விதத்தில் அமைந்து விட்டது.

அடுத்து வரும் வாசகமான, ''தானமென்றும் இடுங்கோள் இருந்தபடி இருங்கோள்'' என்பதில் பொதிந்து உள்ள ஆழமான கருத்தும், கர்ணனின் வாயிலாக யாவரையும் சிந்திக்க வைக்க செய்கிறது.

கர்ணன், போரில் அம்புகளால் தாக்குண்டு, மரணப்படுக்கையில், உயிர் புறத்ததோ, அகத்ததோ என இருந்தசமயம், உலகத்திற்கே படியளக்கும் பரந்தாமன், தேரை விட்டிறங்கி, வேதிய வடிவில் வந்து, இதுகாறும் செய்த புண்ணியம் அனைத்தையும் யாசகமாக கையேந்தி கேட்டு நின்றபோது, தன் நெஞ்சக் குருதியால், அப்பலனை தாரை வார்த்து தந்ததும், கர்ணனது கொடைச் சிறப்பைக் கண்ண பெருமான் வியந்தார். வரம் பெற்றுச் செல்லவந்த பரந்தாமனே, கொடுத்துச் செல்லுமாறு செய்தது கர்ணனின் கொடை வாழ்வு, அது நிறை வாழ்வு தானே! இப்பெருமித உணர்ச்சியை உணர்த்தத் தான், கண்ணன் பாண்டவர் படையிலிருந்து வலிய வந்துள்ளான். இதனை அருண கிரியார் ''குயிலோ மொழி'' எனத்துவங்கும் பாடலில், பின் பகுதியில் பாடியுள்ளதைப் பார்ப்போம்.

''ரவி சேயெனும் - அங்கராசன்
விசிதா தவம் அயல் பேடிகை படுபோது
சன்னிதியானவன், விதிதேடிய - திருவாளி யரன்''

**இதன் கருத்து :-** ரவியின் குமாரனான அங்கநாட்டு அரசன் (விசிதா தவம்) அம்புகள் நிறைந்த போரில் (அயல்) தனக்குப் பகையாயிருந்த (பேடி) அர்ச்சுனன் (கை) கை அம்பினால் (படுபோது) இறக்கும் தருவாயில், (சன்னிதியானான்) கர்ணனுக்கு பிரத்தியட்ச மாய் தரிசனம் தந்த திருமாலும், (விதி) பிரம்மனுமாக இருவரும் அடிமுடி தேடிய (திருவாளி) செல்வ நாயகனான (அரன்) எம்பெருமான் என்பதாகும். என்ன வரம் வேண்டுமென கேட்ட கண்ணனிடம், கர்ணன்,

''அல்லல் வெவ்வினையால் இன்னும் உற்பவம் உண்டாயினும், மேலெழுபிறப்பும் இல்லை என்று இரப்போர்க்கு இல்லை என்றுரையா இதயம் நீ தந்தருள் என்றார்.''

இவ்வாசகங்கள் கண்ணனின் செவிகளில் விழுந்தவுடன், பிறரது அழுகையை நீக்கும் கண்ணனே



தன் கண்ணீரால் கர்ணனை நீராட்டினான். கர்ணன் மரணப்படுக்கையில் வேதனையோடு இருந்த நிலையிலும், சிறிதும் மனம் கோணாமல் தனது குறிக்கோளாகிய தானத்தை கடைபிடித்து வாழ்ந்து காட்டியதை நினைக்கும் தோறும் நம் நெஞ்சத்தை நெகிழவைக்கிறது.

இப்பொழுது, அருணகிரியார் கந்தர் அலங்காரப் பாடலில் கூறிய பின் இரண்டு வாசகங்களாகிய, ''தானமென்றும் இடுங்கோள், இருந்தபடி இருங்கோள்'' என்பதை மேலே கூறிய நிகழ்ச்சியினை ஒப்பிட்டுப் பார்த்தால், எளிதில், இதில் பொருந்தியுள்ள ஆழமான கருத்து புலப்படும்.

இனி பாடல் முழுவதையும் ஒரு முறை சொல்லி, அடியேனது சிற்றறிவுக்கு எட்டியதை விளக்கமளித்துள்ளேன்.

''தடுங்கோள் மனத்தை, விடுங்கோள் வெகுளியை,
தானமென்றும்
இடுங்கோள், இருந்தபடி இருங்கோள் =
எழுபாருமுய்ய
கொடுங்கோபச்சீருடன் குன்றம் திறக்க
தொளைக்க வைவேல்
விடுங்கோன் அருள் வந்து தானே உமக்கு
வெளிப்படுமே''

அருணகிரியாரால் கூறப்பட்ட இந்த நான்கு உபதேச மொழிகளை எவர் ஒருவர் தம்வாழ்நாளில் பின் பற்றுகின்றனரோ, அவர்களுக்கு முருகனது அருள் வந்து தானே உங்களுக்கு வெளிப்படும் என்பதில் சிறிதும் ஐயம் வேண்டாம்.

★★★

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.03.2002ல் துவக்கி வைக்கப்பட்டுள்ள திருக்கோயில் அன்னதான திட்டத்திற்கு நன்கொடை வழங்கியவர்களின் பெயர் பட்டியல்

| எண் | நன்கொடையாளர் விவரம் | தொகை (ரூபாயில்) | திருக்கோயிலின் பெயர் |
| --- | --- | --- | --- |
| 1. | காளத்தூர் சுப்பிரமணிய ஐயர் நினைவு கட்டளை | 25,000/- | அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் ஒப்பிலியப்பன் கோயில், கும்பகோணம் வட்டம் |
| 2. | மாண்புமிகு எம்.சி. சம்பத், அமைச்சர் அவர்கள் | 50,000/- | கடலூர் அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில் |
| 3. | மாண்புமிகு எம்.சி. சம்பத், அமைச்சர் அவர்கள் | 50,000/- | திருவந்திபுரம் அருள்மிகு தேவநாத சுவாமி திருக்கோயில் |
| 4. | திருமதி அமுதா துரைராஜ் உரிமையாளர், தெய்வானை மூவிஸ், எண். 5, எம்.ஐ.ஜி, 20, 11வது அவின்யூ, அசோக் நகர், சென்னை - 83 | 1,00,000/- | கோயில் பெயர் குறிப்பிடப்படவில்லை. |
| 5. | திருமிகு கே. பொன்னுசாமி பி.ஏ. கன்ஸ்டிரக்ஸன்ஸ் 42, வெங்கட கிருஷ்ணா சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை -28. | 1,00,000/- | வடபழனி அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், சென்னை. |
| 6. | திருமிகு ஆர். ராஜமாணிக்கம் 11, பத்மாவதியார் சாலை, கோபாலபுரம், சென்னை. | 25,000/- | வடபழனி அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், சென்னை. |
| 7. | திருமிகு கே.எஸ். ஜானகிராமன் நிர்வாக அறங்காவலர் காளத்தூர் சுப்பிரமணியர் நினைவு அறக்கட்டளை, காளத்தூர் | 25,000/- | அருள்மிகு வெங்கடாசலபதி சுவாமி திருக்கோயில் ஒப்பிலியப்பன் கோயில். |
| 8. | திருமிகு டி. சுதர்சனம் எம்.எல்.ஏ. 23, செங்கல்வராயன் தெரு, செனாய் நகர், சென்னை - 30 | 1,00,000/- | அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் திருவொற்றியூர், சென்னை. |
| 9. | ,, | 1,00,000/- | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி |
| 10. | ,, | 1,00,000/- | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு. |
| 11. | திருமிகு கே.சி. பழனிச்சாமி, ஈரோடு | 25,000/- | அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி |
| 12. | திருமிகு ஆர். மனோகரன் | 25,000/- | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சிவன்மலை |



## அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் நன்கொடை

23.02.2002 அன்று திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கிவைத்த நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அது முதல் தம்முடைய ஒவ்வொரு மாத ஊதியத்தையும் திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கென வழங்கி வருகிறார்கள்.

சோளிங்கரில் உள்ள அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமித் திருக்கோயில், திருச்சி உறையூர் அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமித் திருக்கோயில், திண்டுக்கல் அருள்மிகு காளகத்தீசுவரர் திருக்கோயில், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய சுவாமித் திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களுக்கு 2002 நவம்பர் முதல் 2003 மார்ச்சு வரை உள்ள 5 மாத ஊதியத்தை அந்தந்தத் திருக்கோயில் நிர்வாகிகளிடம் தற்பொழுது வழங்கியுள்ளார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.